# உதயன்

சுடர் : 37
கதிர் : 211

சனிக்கிழமை
25 ஜூன் 2022

ஆனி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை : ரூ. 50


## தனியார் துறையில் அரச பணியாளர்கள்

ஆராய்வதற்குக் குழு நியமனம்

விரிவு - பக். 07

# எரிபொருள் இல்லையெனில் பாடசாலைக்குச் செல்லோம்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 25
ஆசிரியர்களுக்கு எரிபொருள் விநியோகத்தைச் சீர்செய்யவில்லையென்றால் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் (நாளைமறுதினம்) பாடசாலைகளுக்குச் செல்லமாட்டோம் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

15 >

### இலங்கைக்கு

# நிபந்தனையுடன் உதவ நாணய நிதியம் தயார்!

கொழும்பு, செப். 25
இலங்கைக்கு நிபந்தனைகளின் அடிப்படையில் உதவிகளை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளது.

15 >

## காங்கேசன்துறையில் மூதாட்டி படுகாலை!

யாழ்ப்பாணம், ஜூன் 25
யாழ்ப்பாணம் காங்கேசன்துறை - கொல்லங்கலட்டிப் பகுதியில் தனிமையில் வசித்த மூதாட்டியொருவர் கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.
சாணை தவமணி (வயது-76) என்ற மூதாட்டியே படுகொலை செய்யப்பட்டவராவார்.

15 >

## தவறான முடிவெடுத்து இளைஞன் உயிரிழப்பு

விரிவு - பக் 15

### இரண்டாம் கட்டமாக

# தமிழகத்தின் உதவிப்பொருள்கள்: கொழும்புக்கு நேற்று வந்தடைவு!



கொழும்பு, ஜூன் 25
பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்காகத் தமிழக அரசால் ஒரு தொகுதி நிவாரணப் பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளன.
நிவாரணப் பொருள்கள் அடங்கிய கப்பல், நேற்றுக் காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ள நிலை

15 >

### பதுக்கப்பட்டிருந்த

## 630 லீற்றர் டீசல் மானிப்பாயில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25
மானிப்பாய் வீதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து, 630 லீற்றர் டீசல் மீட்கப்பட்டுள்ளது. டீசலைப் பதுக்கிவைத்திருந்த சந்தேகத்தில் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
இது குறித்து மேலும் தெரியவருவதாவது:
யாழ். மாவட்ட சிறப்பு அதிரடிப்படையினரின் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்

15 >

## காங்கேசன்துறை கப்பல் சேவைக்கு பாதுகாப்பு அமைச்சு நேற்று அனுமதி

கொழும்பு, ஜூன் 25
காங்கேசன்துறை சரக்கு கப்பல் சேவைக்கு பாதுகாப்பு அமைச்சு நேற்று அனுமதி வழங்கியுள்ளது.
தமிழ்நாட்டின் பாண்டிச்சேரி, காரைக்கால் போன்ற துறைமுகங்களுக்கும் காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் இடையிலான சரக்குக் கப்பல் சேவையை நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

15 >

### 300,000 கொள்கலன்களில்;

## இந்தியாவிலிருந்து மண்ணெண்ணெய்!

கொழும்பு, ஜூன் 25
இந்தியாவில் இருந்து மூன்று லட்சம் கொள்கலன்களில் மண்ணெண்ணெயை இலங்கைக்கு எடுத்துவருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் உள்ள விவசாயிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் தமது பொருளாதார

15 >

## முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக தம்மிக்க பெரேரா நேற்று நியமனம்!

கொழும்பு, ஜூன் 25
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக தம்மிக்க பெரேரா, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றார்.
ஜனாதிபதி கோத்தாபய முன்னிலையில் அவர் நேற்று

15 >




### இந்திய வெளிவிவகார அமைச்சர்

## ஜெய்சங்கருடன் பீரிஸ் சந்திப்பு!

கொழும்பு, ஜூன் 25
இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுமுன்தினம் நேரில் சந்தித்து இலங்கைக்கு வழங்கிய உதவிகளுக்காக தனது நன்றியைத் தெரிவித்தார்.
இது தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்று அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:
ருவாண்டாவின் கிகாலியில் நடைபெற்று வரும் பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டின் ஒரு அம்சமாக, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், இந்திய வெளிவிவ

15 >

# நீங்கள் பாற்சோறு பரிமாறியபோது ஓயாமல் போராடியவர்கள் நாங்கள்

## கொழும்பு சிவில் சமூக அமைப்பினரிடம் மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 25
காலிமுகத்திடல் போராட்டத்தை நாம் ஆதரிக்கிறோம். ஆனால், போராட்டத்தை நாம் அங்கிருந்து கற்றோம் என நீங்கள் நினைக்கக்கூடாது. நீங்கள் பாற்சோறு உண்டு கொண்டாடிய வேளையிலும் போராடியவர்கள் நாங்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான

15 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தகாலக் கொலைகள் முக்கியமான சாட்சி ஐ.நாவில்

கொழும்பு, ஜூன் 25

**தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியைச் சேர்ந்த ஒருவர், ஜெனிவாவில் இராஜதந்திரிகள் மத்தியில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் கொலைகள் உட்பட பல விடயங்கள் குறித்த இரகசியத் தகவல்களை அம்பலப்படுத்தியுள்ளார் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் உள்ளிட்ட பல கொலைகள், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் குறித்த மிக முக்கியமான தகவல்களை குறிப்பிட்ட நபர் தெரிவித்துள்ளார் என இராஜதந்திர வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

அவர் கொழும்பில் உள்ள மற்றும் வெளிநாடுகளில் உள்ள முக்கிய நாடுகளின் தூதரகங்களுக்கு எழுத்து மூலம் சில தகவல்களை வழங்கியுள்ளார். குறிப்பிட்ட நபர் இலங்கையிலிருந்து தப்பி வெளியேறி தனது உயிருக்கு ஆபத்து என தெரிவித்து வெளிநாடொன்றில் தஞ்சமடைந்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தை சேர்ந்த அதிகாரிகளை இந்த நபர் சந்தித்துள்ளார். தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியும் ஏனையவர்களும் இழைத்த குற்றங்கள் குறித்த தகவல்களை அவர் வழங்கியுள்ளார்.

ஐ.நா. அதிகாரிகள் தொடர்ச்சியாக ஐந்து நாள்கள் இந்த நபரிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடராஜா ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம் படுகொலைகள், ஊடகவியலாளர் பிரகீத்எக்னலிகொட பலவந்தமாக காணாமல் போகச்செய்யப்பட்டமை உட்பட பல சம்பவங்கள் குறித்து குறிப்பிட்ட நபர் தகவல்களை வழங்கியுள்ளார்.

தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி நேரடியாக தொடர்புபட்ட கொலைகள் உட்பட கட்சியுடன் தொடர்புடைய குற்றங்கள் குறித்தும் இவர் தகவல்களை வழங்கியுள்ளார். ஐ.நா. மற்றும் இராஜதந்திர வட்டாரங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் முன்னைய அரசாங்கத்துடன் தொடர்புடைய சிலர் மீது நேரடியாக குற்றச்சாட்டுகளை சுமத்தும் வகையில் அமைந்துள்ளன என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

## அத்தியாவசிய சேவையினருக்கான எரிபொருள் வழங்கல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோருக்கான எரிபொருள் வழங்கல், வீரசிங்கம் மண்டபத்துக்கு அருகிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று ஆரம்பமானது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலரின் தலைமையில் இந்த விநியோகம் நேற்று இடம்பெற்றது. அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் தரப்பினருக்கு, உரிய முன்னறிவித்தல் வழங்கப்பட்டு எரிபொருள் விநியோகம் நேற்று மேற்கொள்ளப்பட்டது. (ஒ-17)

## சுகாதாரத்துறையினருக்கான எரிபொருள் போராட்டத்தால் மக்களுக்கு விநியோகம்

முல்லைத்தீவு, ஜூன் 25

சுகாதாரத்துறையினருக்கு வழங்கப்படவிருந்த எரிபொருள் இளைஞர்களின் போராட்டத்தால் பொது மக்களுக்கு நேற்று விநியோகிக்கப்பட்டது.

முல்லைத்தீவு முள்ளியவளையில் அமைந்துள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு மாவட்டச்செயலரின் அனுமதியுடன் மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதார ஊழியர்கள் போன்றோருக்கு வழங்குவதற்காக கடந்த ஒரு வாரத்தின் பின்னர் 6 ஆயிரத்து 600 லீற்றர் எரிபொருள் நேற்றுமுன்தினம் கிடைத்தது.

இதில் முதற்கட்டமாக கடந்த சில நாள்களாக நீண்ட வரிசையில் காணப்பட்ட மக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் வழங்கப்பட்டது. எனினும் ஏனைய மக்களுக்கு வழங்காததால் இளைஞர்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் குறித்த வீதியூடான போக்குவரத்து சுமார் இரு மணிநேரம் தடைப்பட்டு பதற்றமான சூழல் உருவாகியது.

"அரச உத்தியோகத்தர்களுக்கு பெற்றோலா? அதை மக்களுக்கு வழங்குங்கள்" என்று கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து எரிபொருள் நிலையத்துக்கு பொலிஸார், இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

எனினும் இளைஞர்கள் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்ததால், சுகாதாரத்துறைக்கு வழங்கப்படவிருந்த எரிபொருளை மக்களுக்கு வழங்க எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் மாவட்டச் செயலருடன் அலைபேசியில் கலந்துரையாடினார். அதன் பின்னர் மாவட்டச் செயலரின் அனுமதியுடன் பொலிஸார், இராணுவத்தின் பாதுகாப்புடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மக்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டது. (ஒ-14,19)

## மாணவர்களுக்கு இலைக்கஞ்சி

கிளிநொச்சி, ஜூன் 25

பளை மத்திய கல்லூரியில் மாணவர்களுக்கு இலைக்கஞ்சி நேற்று வழங்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பெருமளவு மாணவர்கள் காலை உணவின்றியே பாடசாலைக்கு சமுகமளிக்கின்றனர்.

இதனைக் கவனத்திற்கொண்டு பளை மத்திய கல்லூரி ஆசிரியர்கள் இணைந்து சேகரித்த நிதியிலிருந்து அனைத்து மாணவர்களுக்கும் இலைக்கஞ்சி வழங்கப்பட்டது. (ஒ-14,113)

## ஆசிய வலய சதுரங்கப் போட்டி: யாழ்.இந்து மாணவன் வெண்கலம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

மாலைதீவில் நடைபெற்ற மேற்கு ஆசிய வலய சதுரங்கப் போட்டியில் இலங்கை சார்பாக பங்குபற்றிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 7 இல் கல்வி பயிலும் மாணவன் பிரகலாதனன் ஜனுக்சன் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளான்.

ஆசிய சதுரங்க சம்மேளனத்தால் 12 வயதுக்குட்பட்டவர்களுக்கான சதுரங்கப் போட்டி கடந்த 17 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையில் மாலைதீவில் நடைபெற்றது.

9 சுற்றுக்களைக் கொண்ட



இந்தப் போட்டியில் 6 1/2 புள்ளிகளைப் பெற்று ஜனுக்சன் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை தட்டிச் சென்றுள்ளான். (ச-இ)

## பொதிசேவை ஊடாக எரிவாயு கடத்தல்

*20 எரிவாயு கொள்கலன்கள் நுகர்வோர் சபையால் மீட்பு*

கொழும்பு, ஜூன் 25

ஹற்றனிலிருந்து கொழும்புக்கு பொதிசேவை நிறுவனம் ஒன்றின் ஊடாக அனுப்பப்படவிருந்த 20 எரிவாயுக் கொள்கலன்கள் அண்மையில் கைப்பற்றப்பட்டுள்ளன.

நுகர்வோர் விவகார அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பிலேயே ஹற்றனில் உள்ள பொதிசேவை நிறுவனம் ஒன்றின் களஞ்சியசாலையில் இருந்து இவை மீட்கப்பட்டுள்ளன என அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# கடந்த ஆண்டு துறைமுக ஊழியர்களுக்கு 5,000 மில்லியன் மேலதிக கொடுப்பனவு

## கோப் குழு கண்டறிவு

கொழும்பு, ஜூன் 25

இலங்கை துறைமுக அதிகார சபையால் கடந்த ஆண்டு 5 ஆயிரத்து 850 மில்லியன் ரூபா மேலதிக கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது என அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவான கோப் குழு கண்டறிந்துள்ளது என கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில்,

கடந்த ஆண்டு மிகை ஊழியர்கள் இருந்த துறைகளின் ஊழியர்களுக்காக மாத்திரம் ஆயிரத்து 173 மில்லியன் ரூபா மேலதிக கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் தகைமையற்ற சுமார் ஆயிரத்து 500 பேர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு கூடுதல் மேலதிக கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, மாதத்துக்கு 400 மணித்தியால மேலதிக கொடுப்பனவையும் பெற்றுக்கொள்ளும் ஊழியர்களும் உள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை, துறைமுக அதிகார சபையில் 69 ஆயிரத்து 686 மில்லியன் ரூபா இலாபம் ஈட்டப்பட்டுள்ளபோதும் திறைசேரிக்கு 600 மில்லியன் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது கோப் குழுவில் கண்டறியப்பட்டுள்ளது.



துறைமுக சட்டத்துக்கமைய 8 சதவீத இலாபம் திறைசேரிக்கு வழங்கப்படவேண்டும். துறைமுக அதிகாரசபையின் இந்த ஊழல் மோசடிக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கையை கோப் குழு மேற்கொள்ளவுள்ளது- என்றுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குறுதி அளித்தும் மருத்துவர்களின் சம்பளம் முழுமையாகக் கிடைக்கவில்லை

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 25**

**பிரதமர், சுகாதார அமைச்சர் ஆகியோர் வாக்குறுதியளித்தும் வடமாகாண மருத்துவர்களின் சம்பளம் முழுமையாக வழங்கப்படவில்லை என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கதிரமலை உமாசுதன் தெரிவித்தார்.**

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையில் அரச அலுவலர்களின் சம்பளம் குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பணியாற்றும் மருத்துவர்களின் சம்பளம் குறைக்கப்படக்கூடாது என்று உயர் அதிகாரிகளுக்கு நாம் பல கோரிக்கைகளை முன்வைத்தோம். இது தொடர்பில் பிரதமர் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோருடன் கலந்துரையாடிய போது அத்தியாவசிய தேவையான சுகாதாரத் துறைக்கு சம்பளங்கள் குறைக்கப்படாது என வாக்குறுதியளிக்கப்பட்டது. எனினும் மருத்துவர்களுக்கு முழுமையான சம்பளம் வழங்கப்படவில்லை.

அத்துடன் எரிபொருள் நிலையங்களில் வரிசையில் நிற்கும் நிலையே காணப்படுகின்றது. அத்தியாவசிய சேவை என்ற அடிப்படையில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னுரிமை காணப்படவில்லை.

இவ்வாறான நெருக்கடிக்குள் நாம் எமது பணிகளை மேற்கொள்ளும் போது முழுமையான சம்பளத்தை வழங்காவிட்டால் நாம் என்ன செய்வது? எமக்குரிய சம்பளம் முழுமையாக வழங்கப்படாமல் விட்டால் நாடும் மக்களும் மிகவும் நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்படுவர்.

நெருக்கடி நிலையை நாம் எதிர்கொண்டு சேவைகளைச் செய்யும் போது சம்பளக் குறைப்பு மேற்கொள்வதை ஒருபோதும் ஏற்க முடியாது. எனவே இதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நாம் எமது சங்கத்துடன் கலந்துரையாடி எதிர்வரும் காலத்தில் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தயாராக உள்ளோம் - என்றார். (ஒ-14,20)

# ஜூலை 6 வரை எரிவாயு இல்லை

## வரிசையில் காத்திருக்க வேண்டாம் லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 25

ஜூலை மாதத்தின் முதல் வாரத்தின் பின்பே சமையல் எரிவாயுவின் சீரான விநியோகம் இடம்பெறும். இதனால் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கான வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது குறைந்தளவேனும் எரிவாயு கையிருப்பில் இல்லை.

அடுத்த மாதம் ஜூலை 5 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இரண்டு கப்பல்களில் 7 ஆயிரம் மெற்றிக்தொன் எரிவாயு நாட்டை வந்தடையவுள்ளது.

அத்துடன் அடுத்த மாதம் 10 ஆம் திகதியின் பின்னர் 25 ஆயிரம் மெற்றிக் தொன் எரிவாயு தாங்கிய கப்பலொன்று மாலைதீவு கடற்பகுதியை அண்மிக்கவுள்ளது. அங்கிருந்து சிறு கப்பல்கள் ஊடாக தொடர்ச்சியாக எரிவாயுவை நாட்டுக்குக் கொண்டுவருவதற்கு திட்டமி டப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் ஐந்தாம் திகதியின் பின்னர் நாளாந்தம் 12.5 கிலோகிராம் நிறை கொண்ட சமையல் எரிவாயு கொள்கலன்கள் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

# பங்கீட்டு அட்டை பதிவுகள் தென்மராட்சியில் ஆரம்பம்

சாவகச்சேரி, ஜூன் 25

தென்மராட்சிப் பிரதேசத்தில் வாகனங்கள் வைத்திருப்போருக்கு எரிபொருள் வழங்குவதற்குரிய பங்கீட்டு அட்டைப் பதிவுகள் அந்தந்த கிராம அலுவலர்களால் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய மோட்டார் சைக்கிள், கார் மற்றும் கனரக வாகனங்களின் விவரங்கள் கிராம அலுவலரால் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. (ஒ-14,9)

# எரிபொருள் பங்கீட்டு அட்டை அடுத்த வாரம் நடைமுறை



யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாண மாவட்டத்தில் அடுத்த வாரத்திலிருந்து பங்கீட்டு அட்டையில் எரிபொருள் விநியோகம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதற்கமைய பொதுமக்களுக்கான எரிபொருள் பங்கீட்டு அட்டை பிரதேச செயலர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது.

அரச திணைக்களங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் பங்கீட்டு அட்டை அந்தந்தத் திணைக்களத் தலைவர்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது.

இதுவரை எரிபொருளுக்கான பங்கீட்டு விநியோக அட்டையை பெற்றுக்கொள்ளாத அரச திணைக்களங்கள், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் அறிவித்துள்ளார். (ஒ-14)

# டீசல் கப்பலும் வருவது தாமதம்

நாட்டுக்கு நேற்றுமுன்தினம் வரவிருந்த டீசல் அடங்கிய கப்பல் எதிர்வரும் 28ஆம் திகதியே வரும் என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் நாடளாவிய ரீதியில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது என எரிசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டுக்கு நேற்று 24ஆம் திகதி வரவிருந்த 92 ஒக்டேன் பெற்றோல் அடங்கிய கப்பலின் வருகையும் தாமதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)




மெத்தப்படிச்ச ஆக்களாலதான் நாட்டில இவ்வளவு பிரச்சினையும் நடக்குது. அதுக்கு நல்ல உதாரணம், எங்கட மாகாண சபைதான். இப்ப நாடு முழுக்க எரிபொருள் பிரச்சினையால தத்தளிச்சுக் கொண்டிருக்கேக்க, அதை எப்பிடித் தீர்க்கலாம் எண்டதுதான் இப்ப எல்லாற்றை யோசனையும். அதுக்காக அரசாங்க உத்தியோகத்தர்களைக் கூட வெள்ளிக்கிழமையில விரதம் பிடியுங்கோ எண்ட கணக்கில, அவையை வீட்டை நிண்டு தோட்டம் செய்யச் சொல்லியிருக்கு அரசாங்கம். அதைவிட ஒப்பீஸுக்கு போறவை பொதுப் போக்குவரத்தைப் பாவிக்கிறதை, அந்தந்த டிப்பார்ட்மெண்ட் தலைவர்மார் ஊக்குவிக்கவேணும் எண்டும் அரசாங்கம் கோரிக்கை விட்டிருக்கு. ஏனெண்டால் எல்லாரும் தனித்தனி மோட்டார் சைக்கிள், கார் எண்டு வந்தால் முடியிற எரிபொருளை விட, பொதுப்போக்குவரத்தில வந்தால் முடியிற எரிபொருள் கொஞ்சம்தான். இப்பிடியெல்லாம் அரசாங்கம் எரிபொருளை எப்பிடி மிச்சம் பிடிக்கலாம் எண்டு யோசிக்க, எங்கட கொம்பு முளைச்ச அதிகாரிமார் வேற வழியில மிச்சம் பிடிக்க பாக்கினம்.

வடக்கு மாகாணசபையில அஞ்சு பஸ் நிக்குது. ஆனால் இதுவரைக்கும் அந்த பஸ்கள் றோட்டில இறங்கினதே குறைவு. அப்பிடியே குமர்ப்பிள்ளையளைப் போல மாகாணசபை அதிகாரியள் அந்த அஞ்சு பஸ்ஸையும் பொத்திப் பொத்தி வைச்சிருக்கினமாம். இப்பதான் பொதுப்போக்குவரத்து இல்லாட்டி ஒப்பீஸில வேலை செய்யிற ஆக்கள் எல்லாரும் ஒண்டா வாறமாதிரியான போக்குவரத்து ஏற்பாட்டைச் செய்யச் சொல்லி அரசாங்கம் அறிவிச்சிருக்கெல்லோ. அதால 'இப்பிடி சும்மா நிக்கிற அஞ்சு பஸ்ஸையும், மாகாண சபையளில வேலை செய்யிற ஆக்களை ஏத்தி, இறக்கப் பாவிச்சால், பெற்றோல் தட்டுப்பாடு எண்டு ஒப்பீஸர்மார் வேலைக்கு வராமல் நிக்கமாட்டினம், அதோட எரிபொருளையும் மிச்சப்படுத்தலாம்' ஒரு அமைச்சின்ர செயலாளர், வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கு ஐடியா குடுத்திருக்கிறார். ஆனால் பிரதம செயலாளரோ, 'அப்பிடியெல்லாம் பஸ்ஸை விட்டால், ரயர் தேய்ஞ்சு போடும், பார்ட்ஸ் உடைஞ்சு போடும்' எண்டு ஏதேதோ சாட்டுச் சொல்லி அந்த பஸ்ஸுகள் அப்பிடியே நிக்கட்டும் எண்டு சொல்லிட்டாராம். இப்ப இருக்கிற மாதிரி நெருக்கடியான காலத்தில பாவிக்காமல், விட்ட இடத்திலேயே நிக்கிறதுக்கோ மாகாணசபைக்கு பஸ் குடுத்தவை? இப்பிடியான அதிகாரியள் இருக்கும் வரை எங்கட மாகாணம் எப்பிடி உருப்படும்? காலம் முழுக்க கன்னி கழியாமல் அந்த பஸ்ஸுகளை இப்பிடியே பொத்தி வைச்சிருந்தால்தான், அதுகளில கறையான் பிடிக்க வசதியா இருக்கும் பாருங்கோ.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விவகாரத்தில் இலங்கைக்கு ஆர்வமில்லை

## ரஷ்யத் தூதுவர் குறிப்பிட்டதாக மைத்திரி தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 25**

**எரிபொருள் மற்றும் உரப்பிரச்சினை தொடர்பில் சாதகமான முறையில் ஆராய முடியும் என்ற போதிலும், இலங்கைத் தரப்பினர் இவ்விடயத்தில் சிறந்த தலையீட்டை மேற்கொள்ளவில்லை எனவே இலங்கைத் தரப்பினர் இதனை விட பொறுப்புடனும், அர்ப்பணிப்புடனும் செயற்பட்டால் தன்னாலும் இவ்விடயத்தில் நேரடித் தலையீட்டை வழங்க முடியும்**

இவ்வாறு இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் யூரி மெடெரி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் எரோபுளொட் விமானம் தொடர்பில் உருவாகியிருந்த சர்ச்சைக்குரிய நிலைமையை சீராக்கும் நோக்கத்துடன் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு கடந்த 5ஆம் திகதி கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டது.

ரஷ்ய ஜனாதிபதியின் பதில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கடந்த புதன்கிழமை ரஷ்யத்தூதுவரால் தெரிவிக்கப்பட்டது.

குறித்த கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் வெகு விரைவில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்து சாதகமான பதிலை ரஷ்ய அரசாங்கம் எதிர்பார்க்கும் வகையில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார். சிறிலங்கா ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்து சாதகமான பதிலை ரஷ்ய அரசாங்கம் எதிர்பார்த்திருப்பதாக ரஷ்ய தூதுவர் இதன்போது குறிப்பிட்டார். (ஒ-இ)

# எரிவாயு கோரி வீதிமறியல்

மன்னார், ஜூன் 25

மன்னாரில் எரிவாயு கோரி மக்கள் நேற்று வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் பேக்கரி நிலைய உரிமையாளர் எரிவாயு முகவராகவும் காணப்படுகின்றார். இந்த நிலையில் பேக்கரி நிலைய எரிவாயு சிலிண்டர் முகவருக்கு அண்மையில் ஒரு தொகுதி லாப்ஸ் எரிவாயு சிலிண்டர்கள் கிடைத்தன. கிடைத்த எரிவாயு சிலிண்டர்களை மக்களுக்கு வழங்காமல் உரிமையாளர் பதுக்கி வைத்துள்ளதாக, எரிவாயு விற்பனை நிலையத்துக்கு முன்பாக வீதிகளை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது குறித்த பகுதிக்கு விரைந்த மன்னார் மாவட்டச் செயலர் திருமதி.ஸ்ரான்லி டிமெல் மற்றும் பிரதேச செயலர் ம.பிரதீப் ஆகியோர் எரிவாயு முகவருடன் கலந்துரையாடிய பின்னர் 21 எரிவாயு சிலிண்டர்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. (ஒ-14-213)

# உத்தியோக அட்டை வழங்காததால் எரிபொருள் பெற முடியாத நிலை

## அதிபர்,ஆசிரியர்கள் கவலை

யாழ்ப்பாணம், ஜூன் 25

வடமாகாண அதிபர், ஆசிரியர்களுக்கு உத்தியோக அடையாள அட்டை வழங்கப்படாததால் தாம் எரிபொருள் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படும் என்று அதிபர்,ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வடமாகாண பாடசாலைகளின் அதிபர்கள்,ஆசிரியர்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் நிலையில் அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

சில வலயங்களில் உத்தியோக அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து பல மாதங்களாகியும் வழங்கப்படவில்லை.

இதேவேளை புதிதாக நியமனம் பெற்ற அதிபர்கள்,ஆசிரியர்களும் தமக்கு உத்தியோக அடையாள அட்டை வழங்க வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

தற்போதைய எரிபொருள் நெருக்கடியில் எரிபொருள் பெறுவதற்கு உத்தியோக அடையாள அட்டை தேவை என்பதால் உடனடியாக உத்தியோக அடையாள அட்டையை வழங்க கல்வி வலயங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14-9)



# மன்னார் சுகாதார ஊழியர்களுக்கு நேற்று எரிபொருள் விநியோகம்

மன்னார், ஜூன் 25

மன்னார் நகரப்பகுதிகளில் கடமையாற்றும் சுகாதார ஊழியர்களுக்கு நேற்று எரிபொருள் விநியோகிக்கப்பட்டது. தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அனுமதிபெற்ற சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டது.

இதேவேளை, திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் விநியோக நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,56)



# எரிபொருள் பெற வந்தவர் விபத்துக்குள்ளாகி காயம்

கிளிநொச்சி, ஜூன் 25

இயக்கச்சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று எரிபொருளைப் பெறுவதற்காக ஓட்டோவுடன் வந்தவர் விபத்தில் சிக்கி காயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஓட்டோவுக்கு எரிபொருளைப் பெறுவதற்காக வடமராட்சி ஆழியவளைப் பகுதியிலிருந்து இயக்கச்சி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வந்து ஓட்டோவை வரிசையில் நிறுத்த முற்பட்டவேளை, யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை நோக்கி சுற்றுலாப் பயணிகளுடன் சென்ற பஸ் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது. விபத்தில் காயமடைந்த ஓட்டோ சாரதி பளை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்தில் காயமடைந்தவர் வடமராட்சி ஆழியவளைப் பகுதியைச் சேர்ந்த 39 வயதுடையவர் என்று தெரிவித்த பளை பொலிஸார் விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14-113)



சாவகச்சேரி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மருத்துவர்கள் உள்ளிட்ட சுகாதாரப் பணியாளர்களுக்குத் தலா 2 ஆயிரம் ரூபாவுக்கு பெற்றோல் நேற்று விநியோகிக்கப்பட்டது. (ஒ-14-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யத் தூதுவர் கூறியதன் முக்கியத்துவம் புரியாத அரசு

## வீரசுமன வீரசிங்க எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 25

உதவி செய்யும் உண்மையான நண்பனை அரசாங்கம் அடையாளப்படுத்திக்கொள்ள வேண்டும் என இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் குறிப்பிட்டதன் முக்கியத்துவத்தை அரசாங்கம் விளங்கிக்கொள்ளவில்லை என கம்யூனிஸ்ட் கட்சியின் பதில் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வீரசுமன வீரசிங்க தெரிவித்தார். கொழும்பில் உள்ள இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமைஇடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எரிபொருள் மற்றும் எரிவாயு பிரச்சினை சமூக கட்டமைப்பில் மிகப் பெரிய நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது. அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள். சமூக மட்டத்திலான பிரச்சினை நாளுக்கு நாள் தீவிரமடைந்து செல்கிறதே தவிர குறைவடையவில்லை.

ரஷ்யாவிடமிருந்து எரிபொருள், எரிவாயு மற்றும் உரம் ஆகியவற்றை குறைந்த விலைக்கு பெற்றுக்கொள்ள அதிக வாய்ப்பு உள்ள நிலையில் அரசாங்கம் அது குறித்து அவதானம் செலுத்தாமல் பொறுப்பற்ற வகையில் செயற்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றவுடன் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு எட்டப்படும் என குறிப்பிடப்பட்டது வெறும் மாயையாக உள்ளது. பிரச்சினைகள் தொடர்பான அறிவிப்பாளராகவே பிரதமர் உள்ளார். அரசாங்கத்தின் சகல தீர்மானங்களும் தோல்வியடைந்துள்ளன. பிரதமர் தலைமையிலான அரசாங்கம் எப்பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவில்லை.

எரிபொருள் வரிசையில் காத்திருந்து உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. எரிபொருள் விநியோகம் குறித்து அரசாங்கம் முறையான கொள்கைத் திட்டத்தை செயற்படுத்தவில்லை. ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை பெற்றுக்கொள்வது தொடர்பில் இலங்கைக்கான ரஷ்ய தூதுவருடன் பேச்சு நடத்திய போது 'உதவி செய்யும் உண்மையான நண்பனை இலங்கை அடையாளப்படுத்திக்கொண்டு, அவர்களிடமிருந்து ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டும்' என தூதுவர் குறிப்பிட்டார். இதன் முக்கியத்துவத்தை அரசாங்கம் இதுவரை விளங்கிக்கொள்ளவில்லை, என்றார். (ஒ-இ)

## மன்னார் எரிபொருள் நிலையங்களில் விநியோகமுறை சீரில்லை

### பிரஜைகள் குழுவில் முறையீடு

மன்னார், ஜுன் 25

மன்னார் எரிபொருள் நிலையங்களில் ஒழுங்கு முறையில் எரிபொருள் விநியோகம் இடம்பெற வில்லை என்று மன்னார் பிரஜைகள் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 9 எரிபொருள் நிலையங் கள் இருக்கின்றபோதும் ஒரு சிலவற்றில் மண் ணெண்ணெய் தவிர்ந்த ஏனைய எரிபொருள்கள் மட்டும் விற்பனை செய்யப்படுகின்றன.

பல கிராமப்புற மக்கள் நீண்ட தூரம் பிரயாணம் செய்து நீண்ட வரிசையில் காத்திருந்து மண் ணெண்ணெய் பெறமுடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர். இதனால் தாம் பல சிர மங்களை எதிர்நோக்குகின்றோம் என்று பொது மக்கள் முறையிட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருள்கள் பதிவு செய்யப்படும் அட்டைகள் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் வழங் கப்பட்டிருக்கின்றன. எனினும் அதன் ஒழுங்கு முறையில் பொருள்கள் வழங்கப்படாது வரிசை முன்னிலையில் இருப்பவர்களுக்கு வழங்கப்ப டுவதால் விற்பனை நிலையங்களுக்கு அருகி லுள்ளவர்கள் ஒவ்வொரு முறையும் பொருள்கள் மற்றும் எரிபொருள் வந்ததும் அதிகம் பெற்றுச் செல்லும் வாய்ப்புக்கள் இருப்பதாகவும் முறை யிட்டுள்ளனர்.

இதற்கமைய இது தொடர்பாக மன்னார் பிரஜை கள் குழு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்துக் கலந்துரையாடி மன்னார் மாவட்டத்துக்கு வரும் எரிபொருள்களை அனைத்துக் குடும்பங்களுக் கும் அத்தியாவசிய தேவைகளுக்கு பகிர்ந்தளிக் கும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-14-60)



### இ.போ.ச. சாலையில்

## டீசல் வழங்கலில் தொடரும் முறைகேடு பேருந்து உரிமையாளர்கள் போராட்டம்

### வாக்குறுதிகளையடுத்து நிறைவு



**யாழ்ப்பாணம், ஜுன் 25**

**இலங்கைப் போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பருத்தித்துறை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தமக்கு உரிய ஒழுங்கில் டீசல் வழங்கப்படுவதில்லை எனத் தெரிவித்து தனியார் பஸ் உரிமையாளர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

பருத்தித்துறை பஸ் நிலை யத்திலிருந்து பருத்தித் துறை பிரதேச செயலகம் வரை தமது பஸ்களை தள்ளிக்கொண்டு வந்து நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தனியார் பஸ்களுக்கும் இலங்கைப் போக்குவ ரத்துச்சபைக்குச் சொந்த மான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் பெற்றுக்கொள்ள முடியும் என அரசாங்கம் அறிவித் துள்ளது. ஆனால் எமக்கு உரிய ஒழுங்கு முறைக ளில் பருத்தித்துறை எரி பொருள் நிலைய முகாமை யாளர் டீசலை விநியோகிக் கவில்லை. இதேவேளை இரவு நேரங்களில் கறுப் புச் சந்தை வியாபாரிக ளுக்கு பெருமளவான டீசல் வழங்கப்படுகின்றது என்று தெரிவித்து போராட் டத்தை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து பருத்தித் துறை பிரதேச செயலர் ஆ.சிறி, பருத்தித்துறை பதில் பொலிஸ் பொறுப்ப திகாரி, வடமராட்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் வடபிராந்திய சாலை முகாமையாளரை அழைத்து கலந்துரையா டினர். இதன்போது 750 இலக்க வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் 25 பஸ்களுக்கும் நாளாந்தம் 750 லீற்றர் டீசல் வழங் குவதாக உறுதியளிக்கப் பட்டது. அதன் பின்னரே போராட்டம் கைவிடப்பட் டது.

(ஒ-14-26)



## எரிபொருள் தட்டுப்பாட்டால் குதிரை வண்டியில் பயணம்

யாழ்ப்பாணம், ஜுன் 25

எரிபொருள் தட்டுப்பாட்டால் அருட்தந்தை ஒருவர் குதிரை வண்டியில் பயணித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அருட்தந்தை ஒருவர் தனக்குத் தேவையான எரிபொருளைப் பெற் றுக்கொள்வதில் பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளதால் தனது வழமையான செயற்பாடுகளை மேற் கொள்ள குதிரை வண்டியில் பயணித்துள்ளார்.

(ஒ-14-26)



## போதியளவு எரிபொருள் கிடைத்தால் அனைவருக்கும் விநியோகிக்கப்படும்

சாவகச்சேரி, ஜுன் 25

போதுமானளவு எரிபொருள் தமது எரிபொருள் நிலை யங்களுக்குக் கிடைத்தால் அனைவருக்கும் விநியோ கிக்கப்படும் என்று தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

கொடிகாமம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொ ருளுக்காக பொதுமக்கள் வாகனங்களுடன் நீண்ட வரிசையில் நேற்றுக் காத்திருந்தனர். எனினும் அவர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கவில்லை.

இது தொடர்பாக தென்மராட்சி கிழக்கு பலநோக் குக்கூட்டுறவுச் சங்க முகாமையாளருடன் தொடர்பு கொண்டபோது கடந்த 17 ஆம் திகதிக்குப் பின் இது வரை பெற்றோல் வரவில்லை. பெற்றோல் வராது என்று கூறியும் பொதுமக்கள் காத்திருக்கின்றனர். அத்தியாவசிய தேவைக்காக மட்டும் டீசல் விநியோ கிக்கப்படுகின்றது.

கொடிகாமம், புலோலி, யாழ்ப்பாணம் ஆகிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அத்தியாவசிய தேவை எரிபொருள் நிரப்பு நிலையங்களாக மாற் றப்பட்டுள்ளன.

அத்தியாவசிய சேவையாக்கினால் இந்த மூன்று எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எப்போதும் 2 ஆயிரத்து 500 லீற்றருக்கும் குறையாமல் டீசல் இருக்க வேண்டும். இந்த நிலையில் போதியளவு எரிபொருள் எமது நிலையங்களுக்குக் கிடைத்தால் அனைவருக்கும் தேவைக்கேற்ப எரிபொருள் விநி யோகிக்கப்படும் என்று தெரிவித்தார். (ஒ-14-159)

## ஓட்டோக்களுக்கு எரிபொருள் பெற பங்கீட்டு அட்டை வழங்க வேண்டும்

சாவகச்சேரி, ஜுன் 25

சாவகச்சேரி நகரசபையில் பதிவை மேற்கொண்டுள்ள வாடகை ஓட் டோக்களுக்கு வாராந்தம் எரிபொ ருள் பெறுவதற்கு, யாழ்.மாவட்டச் செயலருடன் தொடர்புகொண்டு பங்கீட்டு அட்டை பெற்றுக்கொடுக்க சாவகச்சேரி நகரசபையில் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட் பட்ட ஓட்டோ தரிப்பிடங்களில் 40 க்கு மேற்பட்ட ஓட்டோக்கள் சபையில் பதிவு செய்து வாடகைக்கு சேவை யில் ஈடுபட்டு வருகின்றன.

சாவகச்சேரி எரிபொருள் நிலை யத்தில் எரிபொருள் வழங்கும் வேளைகளில் தமது நாளாந்த வருமா னத்தைக் கைவிட்டு எரிபொருள் பெற வரி சையில் காத்திருக் கின்றனர். சபையில் பதிவு செய்துள்ள ஓட்டோக்கள் எரிபொ ருள் பெறுவதற்கு வரிசையில் காத்தி ருப்பதால் பொதுமக்கள் இவர்களின் சேவைகளைப் பெற முடியாமல் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.



இதனைக் கருத்திற்கொண்டு சாவ கச்சேரி எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் வழங்கப்படும்போது பதிவு செய்த ஓட்டோக்களுக்கு முன்னுரிமையில் வாரத்துக்கு ஒரு தடவை எரிபொருள் வழங்க பங்கீட்டு அட்டை வழங்குமாறு யாழ்.மாவட்டச் செயலர், தென்மராட்சிப் பிரதேச செயலர், சாவகச்சேரி பலநோக் குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற் றுக்கு சாவகச்சேரி நகரசபையால் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

(ஒ-14-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் மாகாணத் தேர்தல்

## நாடாளுமன்றத் தெரிவுக்குழு பரிந்துரை

**கொழும்பு, ஜூன் 25**

**விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு பொருத்தமான சட்டத்தை இயற்றுமாறு தேர்தல் முறைமை தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழு பரிந்துரை செய்துள்ளது.**

தேர்தல் முறைமை தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது இறுதி அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதில்,2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் மூலம் ஏறக்குறைய இருமடங்காக அதிகரிக்கப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபைகளின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறைக்கப்படவேண்டும் என குழுவில் அதிகளவானோர் யோசனை முன்வைத்துள்ளனர்.

சமூகங்கள் மற்றும் அமைப்பில் பிரதிநித்துவம் இல்லாத கட்சிகளுக்கு சமமான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துமாறு அரசியல் கட்சிகள் தெரிவுக் குழுவிடம் வலியுறுத்தியுள்ளன.

உள்ளூராட்சி அதிகார சபைகளில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு குழுவின் சகல உறுப்பினர்களும் உடன்பட்டுள்ளனர்.

புதிய எல்லை நிர்ணயம் மூலம் தொகுதிகளின் எண்ணிக்கையை குறைப்பதன் அல்லது விகிதாசார பிரதிநிதித்துவப் பகுதியைக் குறைப்பதன் ஊடாக உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்கலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போதைய உள்ளூராட்சி மன்றத்தேர்தல் முறையைத் தொடர்வது பொருத்தமானது. அந்தவகையில் தொகுதிவாரி 60 சதவீதம் மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் 40 சதவீதம் என்ற வகையில் தக்கவைக்கப்படவேண்டும். அத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு தொங்கு ஆசனங்கள் அகற்றப்பட வேண்டும் என தெரிவுக் குழு யோசனை முன்வைத்துள்ளது.

**மாகாணசபை தேர்தல்**

மாகாணசபைத் தேர்தலை பழைய தேர்தல் முறையின் கீழ் (விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை) நடத்துவதற்கு குழு இணக்கம் தெரிவித்திருந்தாலும், 2017ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைத் திருத்தச் சட்டத்தால் இரத்து செய்யப்பட்ட அட்டவணைகள் மற்றும் படிவங்கள் உள்ளிட்ட முதன்மைச் சட்டத்தின் ஏற்பாடுகள் பொருத்தமான சட்டத்தை கொண்டு வருவதன் மூலம் மீண்டும் செயற்படுத்தப்பட வேண்டும் என சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

2017 ஆம் ஆண்டு 17ஆம் இலக்க மாகாணசபை திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு குழு இணக்கம் தெரிவித்ததால் உள்ளூராட்சித் தேர்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தின்படி தேவையான வரையறை நிர்ணயத்துடன் கூடிய கலப்புத் தேர்தல் முறைக்கான சட்டம் இயற்றப்படும் வரை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு பொருத்தமான சட்டத்தை இயற்றுமாறு குழு பரிந்துரை செய்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை தொடர்ந்து 225 ஆக காணப்பட வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலின் கலப்பு முறையை அறிமுகப்படுத்த குழு பரிந்துரைத்துள்ளது. அதாவது 70 சதவீதம் தொகுதிவாரி முறைமை, 30 சதவீதம் விகிதாசார முறைமை, தேசிய பட்டியல் முறைமை தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. (ஒ-இ)



# தனியாரின் காணி அளவீடு பொதுமக்களால் முறியடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

காரைநகர் ஜே/44 கிராம அலுவலர் பிரிவிலுள்ள தனியார் ஒருவருக்கு சொந்தமான காணியை கடற்படையினருக்கு அளவீடு செய்யும் முயற்சி நேற்று முன்தினம் பொதுமக்களால் முறியடிக்கப்பட்டது.

குறித்த பகுதியில் உள்ள சுமார் 11 ஏக்கர் காணியை அளப்பதற்கு நில அளவைத் திணைக்களத்தினர் வந்திருந்தனர்.

இதனையடுத்து அங்கு ஒன்றுகூடிய அரசியல் பிரமுகர்கள், சமூகமட்ட அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து காணி அளவீடு செய்யும் முயற்சியை முறியடித்தனர். (ஒ-14-27)

# ஹிருணிகாவுக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்த ரணில்

கொழும்பு, ஜூன் 25

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவின் தாய்மையை களங்கப்படுத்த வேண்டாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை பிரதமர் ரணிலுக்கு எதிர்ப்பை வெளியிட்டு அவரது இல்லத்துக்கு ஹிருணிகா உள்ளிட்டவர்கள் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர். அதில் எடுக்கப்பட்ட சில புகைப்படங்கள் ஹிருணிகாவை இழிவுபடுத்தும் வகையில் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டு வருவது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

மூன்று பிள்ளைகளின் தாயான ஹிருணிகாவை இழிவுபடுத்தக்கூடிய வகையிலான புகைப்படங்களை வெளியிடுவதைத் தவிர்க்கவேண்டும். நாகரிகமான சமூகம் தாய்மையை இழிவுபடுத்தக்கூடாது. அனைத்து விடயங்களை விடவும் தாய்மை மேலானது என்ற எண்ணக்கருவை முதன்மைப்படுத்த வேண்டும். ஹிருணிகா எனது இல்லத்துக்கு எதிரில் போராட்டம் நடத்தியமையானது அரசியல் ரீதியான ஓர் காரணியின் அடிப்படையில் என்பதனால் அதற்கு அரசியல் ரீதியாகவே பதிலளிக்கவேண்டும் - என்றார். (எ-இ)

# விலங்கு தடுப்பு மருந்து இன்மையால் நாய்களைக் கட்டுப்படுத்த வேண்டும்

*மருத்துவர் ரி.வினோதன் எச்சரிக்கை*



மன்னார், ஜூன் 25

மருத்துவமனைகளில் தற்பொழுது விலங்கு மற்றும் விசர்நாய்க் கடிகளுக்கான தடுப்பு மருந்து வகைகள் இன்மையால் அனைவரின் பாதுகாப்புக் கருதி நாய்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் ஆடி மாத மடுப் பெருவிழா தொடர்பாக மன்னார் மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஆடி மாத மடுப் பெருவிழாவுக்கு இந்த முறை கட்டுப்பாடற்ற முறையில் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மடு ஒரு காட்டுப் பகுதியாக இருப்பதால் கட்டாக்காலி நாய்கள் வருவதற்கு வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

எனவே தற்பொழுது தடுப்பு மருந்து வகைகள் இல்லாததால் மடுவுக்கு வரும் மக்களை நாய்க் கடியிலிருந்து பாதுகாக்க வேண்டுமென்றால் நாய்களைக் கட்டுப்படுத்த வேண்டும்-என்றார். (ஒ-14,60)



# ஆட்சியாளர்கள் 'ஏசி'யில் யோகா மக்கள் வெயிலில் காய்கின்றனர்

*எதிர்க்கட்சித் தலைவர் சஜித் 'பளார்'*

கொழும்பு, ஜூன் 25

அரசாங்கத்திடமிருந்து மக்கள் நெருக்கடிக்கான தீர்வுகளை எதிர்பார்க்கிறார்களே தவிர நாட்டின் தீர்க்க முடியாத குறைகளை அல்ல. மக்கள் தமது சொந்த சுமைகளோடு நாட்டை அழித்த ஆட்சியாளர்களின் சுமைகளையும் சேர்த்து சுமக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் 98 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நாகொடமுல்ல ஸ்ரீ ஆனந்தராம விகாரையில் நிர்மாணிக்கப்பட்ட நினைவு விகாரை சாசன அர்ப்பணிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய மக்கள் சக்தி இலக்குகளை அடையும் சிறந்த வேலைத்திட்டத்தை கொண்டுள்ளது. அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

அரசாங்கத்திடமிருந்து மக்கள் தீர்வுகளை எதிர்பார்க்கிறார்களேயன்றி,தீர்க்க முடியாத குறைகளை அல்ல. கடந்த இரண்டு வருட ஆட்சியின் கீழ் மக்கள் அரசியல் நாடகங்களை மட்டுமே மரபுரிமையாக பெற்றுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதியும் எனது தந்தையாருமான ரணசிங்க பிரேமதாஸ போர்ச் சூழலிலும் இயலாமை, முடியாமை பற்றி பேசாமல் செயற்பட்டார்.

முழுநாடும் இன்னல்களில் மூழ்கிய நிலையிலும் பொதுமக்கள் வரிசையில் வெயிலில் கருவாடு போல் காய்ந்து கொண்டிருக்கும் போதிலும் குளிரூட்டி இயந்திரங்களை வைத்துக் கொண்டு யோகா செய்து கொண்டிருக்கின்றனர் நாட்டின் பிரச்சினைகளை தீர்ப்பதாக கூறி ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள்.

மக்கள் படும் துன்பங்களை மூடி மறைத்தேனும் தமது இருப்பை பலப்படுத்தவே இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது- என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

" உழைப்பின் சக்தியே உலகில் மிக உன்னதமானது அதை வெற்றி கொள்ளும் ஆற்றல் வெறெந்த சக்திக்கும் கிடையாது"
- ஆபிரகாம் லிங்கன்

## இதுவே ஒரே வழி!

'உள்ளதையும் கெடுத்தானாம் நொள்ளைக் கண்ணன்' என்பதைப்போல யாழ். மாவட்டத்தின் பெற்றோல் விநியோகத்தை சீர்படுத்துகின்றோம் என்ற போர்வையில், ஏற்கனவே இருந்த கொஞ்சநஞ்ச ஒழுங்கமைப்பையும் குழப்பியடித்திருக்கின்றது யாழ். மாவட்டச் செயலகம். எரிபொருள் விநியோகம் ஓரளவு சீராக இருக்கும்போதே பங்கீட்டு முறைமையை அறிமுகப்படுத்தியிருந்தால் குடா நாட்டில் இவ்வளவு பிக்கல்,பிடுங்கல்கள் ஏற்பட்டிருக்காது. ஆனால் அப்படிப் பங்கீட்டு முறையை உருவாக்குங்கள் என்று பலதரப்புகளும் ஓயாமல் சொல்லியும் கூட, மாவட்டச் செயலரும், மாவட்ட நிர்வாகமும் செவிடன் காதில் ஊதிய சங்கு போல அதனைச் செவிமடுக்காமல் இருந்ததன் விளைவே இப்போதைய நிலைமை.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங்கள், மக்களின் அமைதியின்மை, விரக்தி இவை எல்லாவற்றையும் தங்களுக்குச் சாதகமாகப் பாவிக்கும் எரிபொருள் மாபியாக்களுக்கு துணைபோன முழுப்பொறுப்பும் மாவட்டச் செயலகத்தையே சாரும். எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஏற்பட்ட கைகலப்புக்கும், அதன் பின்னரான இளைஞனின் உயிரிழப்புக்கும் யாழ். மாவட்டச் செயலகம் பதிலளிக்க வேண்டிய பொறுப்புள்ளது. ஏனெனில் எரிபொருள் விநியோகத்துக்கான பொறிமுறையை மாவட்ட செயலகம் கையில் எடுத்த பின்னர்தான், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் போர்க்களங்களாக மாறியிருக்கின்றன. வன்முறை நிகழாத எரிபொருள் நிரப்பு நிலையமே இல்லை என்னுமளவுக்கு நாளும், பொழுதும் மக்கள் தங்களுக்குள்ளேயே பெற்றோலுக்காக முட்டி மோதிக்கொள்ளும் அவல நிலையை உருவாக்கியமைக்கும் மாவட்ட செயலகம் பதில் சொல்லியேயாகவேண்டும்.

கடந்த காலங்களில் அரசாங்கமே நடைமுறைப்படுத்த முடியாமல் திணறிய பல விடயங்களைச் சீராகவும் சிறப்பாகவும் செய்த பெருமை யாழ். மாவட்டச் செயலகத்துக்கு உண்டு. ஆனால், இப்போது சாதாரண பெற்றோல் விநியோகத்தைக் கூட, சீராகக் கையாளத் தெரியாமல், நடைமுறைச் சாத்தியமான பொறி முறையை கண்டறியமுடியாமல், கண்மூடித்தனமான திட்டங்களால் இன்று ஒட்டுமொத்த யாழ்ப்பாணமும் கொந்தளிக்கும் நிலை உருவாகியுள்ளது. குறிப்பாக இப்போது யாழ்ப்பாண மக்களில் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஒரு பக்கமாகவும், அரச உத்தியோகமற்றவர்கள் இன்னொரு பக்கமாகவும் நின்று, பெற்றோலுக்காக மல்லாடுகின்றனர். ஆளுக்காள் வசை வார்த்தைகளை அள்ளி இறைக்கின்றனர். சிலசமயங்களில், கைகலப்பில் இறங்குகின்றனர். நாமெல்லோரும் தமிழ் மக்கள் என்ற ஒற்றுமையை எல்லோரும் அடியோடு மறந்துவிட்டு, அடிபிடியில் ஈடுபடத்தொடங்கியுள்ளனர்.

பிரதேச செயலகங்களின் கீழ் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் கொண்டு வரப்பட்ட பின்னர், அரச பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கியமையால் சகல இடங்களிலும் குழப்பங்கள் ஏற்பட்டன. மக்கள் நீண்ட நாள்களாக வரிசையில் காத்திருக்க, அரச பணியாளர்கள் திடீரென வந்து எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும்போது இந்தக் குழப்பங்கள் ஏற்படுவது இயல்பானது. இதைக்கூட உணராமல் அதனைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த யாழ். மாவட்டச் செயலக நிர்வாகம் ஊக்குவித்தமையே கவலைக்குரியது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அரச பணியாளர்களுக்கும் எரிபொருள் வழங்கிக் கொண்டே பொதுமக்களுக்கும் விநியோகித்திருந்தால் இந்தக் குழப்பங்களை ஓரளவுக்கு குறைத்திருக்க முடியும். ஆனால் நிர்வாகத்தில் இருப்போர் இது பற்றி எந்தக் கரிசனையும் கொள்ளவில்லை. மாறாக தமக்குத் தேவைப்பட்டோரை திருப்திப்படுத்தினால் போதுமே என்று மாவட்டச் செயலகம் இருப்பதுதான் ஆகக்கூடிய வேதனையான விடயம்.

இன்னமும் உணவுக்கான வரிசை இங்கு ஆரம்பமாகவில்லை. ஆனால் விரைவில் அப்படி உணவுப்பொருள்களுக்காகவும், பெற்றோலுக்கு நிற்பதை விடவும் நீண்ட வரிசைகளில் மக்கள் நிற்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை. வெள்ளம் வந்த பின்னர் அணை கட்டலாம் என, உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் காலம் தாழ்த்தி நடவடிக்கையில் இறங்காமல், இப்போதே அதற்கான பொறிமுறையை உருவாக்கி,சகலருக்கும் எல்லாப் பொருள்களும் சரிசமமாகக் கிடைப்பதை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும். அதுவே உணவுப்பொருள்களுக்காக, எதிர்காலத்தில் ஏற்படப்போகும் வன்முறைகளைத் தடுப்பதற்கான ஒரே வழி.




# தனியார் துறையில் அரச பணியாளர்கள்

## ஆராய்வதற்கு குழு நியமனம்

**கொழும்பு, ஜூன் 25**

**நாட்டுக்குள் தனியார்துறையில் வேலைவாய்ப்பை தொடர்வதற்கு அரச ஊழியர்களுக்கு 5 வருட விடுமுறை வழங்குவது தொடர்பில் ஆராய்வதற்கு 7 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.**

இந்தக் குழு இதுதொடர்பில் ஆராய்ந்து இரண்டு வாரங்களுக்குள் அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என பொதுநிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை பொதுநிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சால் அரச ஊழியர்கள் சம்பளமில்லாத மற்றும் சேவை மூப்பு மற்றும் ஓய்வூதியத்துக்கு பாதிப்பில்லாத விடுமுறையில் தொழில்வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்கு செல்வதற்கு கடந்த 13ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதியளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## ஜோன்ஸ்டனுக்கு நீதிமன்று மீண்டும் அழைப்பாணை

கொழும்பு, ஜூன் 25



முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவரை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் எதிர்வரும் ஜூலை 4ஆம் திகதி முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில் சதொச ஊழியர்களை அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மே 9 வன்முறைச் சம்பவம் தொடர்பில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த புதன்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டபோது தலா 10 மில்லியன் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் அவரை விடுவிக்க நீதிமன்று உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## பசளை விநியோகம்: விடுமுறைகள் ரத்து

கொழும்பு, ஜூன் 25

பசளை விநியோகத்தை விரைவுப்படுத்த எதிர்வரும் ஜூலை 7ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை விவசாய அமைச்சின் கீழ் இயங்கும் சகல நிறுவனங்களின் சேவையாளர்களதும் விடுமுறை ரத்து செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி 65 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரம் இலங்கைக்கு கிடைக்க உள்ளதாக விவசாய அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஒ-இ)

**நாளை** 26.06.2022 **ஞாயிற்றுக்கிழமை** **ஆனி 12**


சுபநேரம் : 08.55 - 10.25
ராகுகாலம்: 04.25 - 05.55

**பிரதோஷ விரதம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










# பொருளாதாரப் பேரிடர் ஏற்படுத்தும் தாக்கங்களும் எதிர்கொள்ளலும்

■ மருத்துவர் சி.யமுனாநந்தா

தற்போதைய பொருளாதாரப் பேரிடர் சமூக மட்டங்களில் ஏற்படுத்தும் தாக்கங்களை நாம் ஆராய்ந்து அவற்றை அனுகூலமான முறையில் எதிர்கொள்ளல் அவசியமானதாகும். தற்போதைய சூழலில் அத்தியாவசியமான பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்கள் பட்டினியை எதிர்நோக்கி உள்ளனர். வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது.

தற்போதைய பொருளாதாரத் தளம்பல் நிலைக்கு உள்நாட்டுக் காரணிகளும், சர்வதேச காரணிகளும் காரணமாக உள்ளன. உள்நாட்டுக் காரணிகளுள் முறையற்ற திட்டமிடல்கள், நிதி நிர்வாகம் என்பனவும், ஊழல், இனவாதம், மதவாதம் மிக்க அரசியல் நடவடிக்கைகள் என்பனவும் காரணமாக அமைகின்றன. பொருளாதாரத் தளர்வுக்கான சர்வதேசக் காரணிகளில் ரஷ்ய - உக்ரைன் போர் முதன்மையானதாகவும், கொரோனாத் தொற்றுத் தொடர்பான பொருளாதார முடக்கம் இரண்டாவதாகவும், காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட விவசாய வீழ்ச்சி மூன்றாவதாகவும் அமைகின்றன.

### எவ்வகையான பாதிப்பை இலங்கை எதிர்கொள்கிறது

இந்த நிலையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள பாதிப்பை ஐந்து தளங்களில் அவதானிக்கலாம். அவையாவன :

1) அரசியல் உறுதியற்ற நிலை
2) சமூக வர்க்கமட்ட உடைவு
3) சமூக உள இடையீட்டு முதலுதவியின் தேவையின் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை.
4) நுண் நிதிய விருத்தியில் சமூக மூலதனப் பற்றாக்குறை காணப்படுகின்றமை.
5) நிலைபேறான சமூக அமைப்பை பேண முடியாத நிலைமை காணப்படுகின்றமை.

தற்போதைய பஞ்சத்தில் அரசியல்வாதிகள் ஒருவரையொருவர் குற்றம் காணுவது மக்களுக்கு எவ்வித பயனையும் தரப்போவதில்லை.

அரசனும் ஆண்டி ஆவான் என்பதுபோல் தற்போது எரிபொருள் இன்மையால் கோடிக்கணக்கான பெறுமதியான வாகனம் ஓர் அங்குலம் நகரமுடியாது உள்ளது. சில ஆயிரம் பெறுமதியான வாகனங்களும் ஓர் அங்குலம் நகரமுடியாதுள்ளது.

இவ்வாறே அத்தியாவசியமான உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளவும் அனைவரும் திண்டாடும்நிலை ஏற்பட்டுள்ளது. இவைகள் சமூகவர்க்க மட்ட உடைவுக்கு உதாரணமாக அமைகின்றன. இதனைப் பங்கீட்டு அடிப்படையிலான பண்டமாற்றுக்கள் மூலமே எதிர்கொள்ள வேண்டிய நிலைமை உள்ளது.

தற்போதைய சூழலில் சமூக உள இடையீட்டு முதலுதவி அதிக அளவில் தேவைப்படுகின்றது. சமூக உள இடையீட்டு முதலுதவி என்பது பேரிடர் நேரத்தில் சமூகம் சோர்வடைந்து போகாமலும், எதிர்காலம் பற்றிய நம்பிக்கையினை ஏற்படுத்தும்





வகையிலும் சமூகமட்டத்தில் உதவுதல் ஆகும். இப்பேரிடர் காலத்தில் இந்திய அரசினால் எமக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட மருந்துகளும், உணவுப் பொருள்களும், எரிபொருள்களும் இவற்றுள் அடங்கும். இவை சமூகம் ஆறுதல் அடையவும், நெருக்கீட்டை ஆக்கபூர்வமாக அணுகவும் ஓர் இடைவெளியை அளிக்கும். சமூக வன்முறைகள், கலகங்கள் ஏற்படுவதனைத் தடுக்கும்.

### மீட்பு வலயம் அவசியம்

சமூக இயக்கத்தில் குடும்பப் பொருளாதார விருத்தி என்பது நுண் நிதிய விருத்தி ஆகும். இன்று பலர் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர். அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை ஈட்டமுடியாது திணறுகின்றனர். இந்த நிலையில் சிறிய சிறிய தொழில் முயற்சிகள் ஊக்குவிக்கப்படல் வேண்டும். கடந்த காலங்களில் எமது பிரதேசங்களில் பொருளாதாரத்தடை இருந்தபோது எரிபொருள்களைப் பல தடைகளைத்தாண்டி சில போத்தல்களில் எடுத்துவந்து வியாபாரம் செய்து பல குடும்பங்கள் தமது வாழ்[illegible] உருவாக்கின. பலர் [illegible]வண்டிகளில் விறகுகளை எடுத்து வந்து விற்பனை செய்தனர். இவ்வாறான தொழில் முயற்சிகளை

நாம் தற்போது கச்சதீவு பொருளாதார மீட்பு வலயம் அமைத்து மேற்கொண்டால் யாழ்ப்பாணத்தில் சுமார் 50 ஆயிரம் பேருக்குரிய வாழ்வாதாரம் நேரடியாகக் கிடைக்கும். மாறாக கப்பலில் கடனடிப்படையில் எரிபொருள்களையும், எரிவாயுவையும் பெற்று சமூகத்தின் மேல்தட்டு மக்களுக்கு விநியோகித்தால் பணத்தை உழைக்க முடியாது. மாறாக காசு அடிக்கும் இயந்திரம் மூலம் பணத்தை உருவாக்க வேண்டிய சூழலே தொடரும். இதனால் நாள்தோறும் பணவீக்கம் அதிகரிக்கும்.

பொருளாதார நெருக்கடி நிலையில் சிறு தொழில் முயற்சிகள், சில்லறை வர்த்தகம், விவசாயம், கடற்றொழில் என்பன ஊக்குவிக்கப்படல் வேண்டும். இவற்றுக்குரிய சமூகமூலதனத்தை நாம் கூட்டுறவாகத் திரட்டல் அவசியம். தனிநபர் முதலாளித்துவம் தவிர்க்கப்படல் வேண்டும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி உலகம் முழுவதும் ஓர் அலைபோல் தாக்கத்தைச் செலுத்தும்.

எனவே தற்போதைய சூழலில் நாட்டை விட்டு வெளியேற முடிவெடுத்தல் என்பது நிலவுக்கு அஞ்சி பரதேசம் போவது போல் ஆகும். ஒவ்வொருவரும் தமது குடும்பத்தை நிலைநிறுத்தி தாம் சார்ந்த சமூகத்தைச் சிதையவிடாது காத்தல் அவசியம். சமூக இயக்கம் என்பது வெறுமனே அரசியல் தளத்தில் நகரும் பொறிமுறை அல்ல.

எனவே அரசியல் காழ்ப்புணர்வுகளை இன வன்மங்கள், மத வன்மங்கள், வெறுக்கத்தக்க பேச்சுக்கள் என்பவற்றைச் சமூகத்தில் பரப்பல் தவறானது. தற்போதைய மனிதநேய நெருக்கடியைப் பொறுப்புடன் உற்றுநோக்கி ஆக்கபூர்வமாகச் செயற்படுவது அனைவரதும் கடமையாகும். அன்றேல் நாம் பேரிடரால் காவு கொள்ளப்பட்டு விடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஸ்பெயினில் உள்ள மட்ரிட் நகரில் சர்வதேச நாய்கள் கண்காட்சி நேற்று கோலாகலமாக நடந்தது. இந்தக் கண்காட்சியில் உலகின் பல நாடுகளை சேர்ந்த பல்வேறு விதமான நாய்கள் கலந்து கொண்டன. (ச-இ)

## விருச்சிகாசன யோகாவில் இந்தியர் கின்னஸ் சாதனை




இந்தியாவைச் சேர்ந்த யோகா ஆசிரியர் ஒருவர் 29 நிமிடங்கள் வரை விருச்சிகாசன நிலையில் இருந்து புதிய கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.
21 வயதாகும் யாஷ் மன்சுக்பாய் மொராடியா என்பவரே இவ்வாறு தொடர்ந்து 29 நிமிடங்களாக விருச்சிகாசனா நிலையில் இருந்து புதிய கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.
சாதனையின் காணொலி கின்னஸ் உலக சாதனைகளின் அதிகாரபூர்வ சமூக வலைத்தளப்பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 19 - 07 - 1927

இறப்பு 23 - 06 - 2022



### ஜயாத்துரை சண்முகம்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட ஜயாத்துரை சண்முகம் நேற்று முன்தினம் (23.06.2022) வியாழக்கிழமை கனடாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜயாத்துரை-தங்கம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-அன்னபூரணம் தம்பதிகளின் மருமகனும், இராஜேஸ்வரி (தேவி) அவர்களின் அன்புக் கணவரும், சிறிஸ்கந்தராசா, வரதராசா, சிவராசா, கிருபராசா, அற்புதராசா, சத்தியராசா, சுமித்திரா, காலஞ்சென்ற ரவீந்திரராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், தயானந்தி, ராதாலட்சுமி, ஜினோ, ரஜனி, சுதா, சிவகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜனனி, லவன், சேரன், பிறேனி, பிரவீன், யூட் டிவைன்ஸ்ரன், சுகன்யா, ஜிஜிதா, பிரஜித், லிசாந், ஜிரோசன், சங்கவி, ராகவி, ரகுநாத் ஆகியோரின் பிரியமான பேரனும், ஆரியனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல நாளை மறுதினம் (27.06.2022) திங்கட்கிழமை மாலை 6.00 PM - 9.00 PM மணிவரை Chapel Ridge Funeral Home 8911 Woodbine Avenue Markham Ontario இல் பார்வைக்கு வைக்கப்பட்டு கிரியைகள் 12492 Woodbine Ave. Gormley, Ont LØH, IGØ Canada வில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 45318) (3/6)

தகவல்: குடும்பத்தினர்


Sri : +94766436133, Kiruba : +14164509181, Home : +14162879720
Sivaraja: +447766662481, Atpu : +14169941112, Sumi: +447966581229

## ஆறாம் மாத நினைவஞ்சலி

### தர்மகுலசிங்கம் சுரேஸ்

தோற்றம் 08.02.1986

மறைவு 25.12.2021



எங்கள் வீட்டின் கடைக்குட்டி
எங்கள் புன்னகையின் குறும்பாக
எங்கும் நிறைந்திருக்கும்
தம்பிக்குட்டி நீ இல்லை என்று சொல்லமாட்டோம்,
நாம் கண்டது கனவுதான் உன்முகம் பார்த்துப்பேசி,
சிரித்து இன்றுடன் ஆறுமாதம் நீ எம்முடன்
வாழ்வதாகவே உணர்கின்றோம், உடல் தான் இல்லை
ஆனால் உன் உயிர் எம்மிடம் தான் இருக்கிறது. – எம்
இதயத்தை அறுத்து தீராத வலியை எமக்குத் தந்து – எம்
உயிரான உடன் பிறப்பை கவர்ந்து செல்ல அந்த பொல்லாத
காலனுக்கு எப்படிதான் மனம் வந்ததோ?
தம்பி நீ சென்றது திரும்பி வர முடியாத பயணம் தான்,
இருந்தும் மீண்டும் பார்த்துப் பேசிவிட முடியாத – என்ற
ஏக்கம் எம்முடன் என்றும் இருக்கும்

என்றும் உன் நினைவுகளுடன்
உன் உயிரான குடும்பத்தினர்

(CS45326) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.6 லட்சம் இந்தியத் திட்டத்தில் கோழிக்கூடு கூடக் கட்டமுடியாது

## கிளிநொச்சி வீட்டுத்திட்டப் பயனாளிகள் ஆதங்கம்

**கிளிநொச்சி, ஜூன் 25**

**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் 2021ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட முன்மொழிவுக்கு அமைய 6 லட்சம் ரூபா பெறுமதியான இந்திய வீட்டுத் திட்டத்துக்கு தற்போது நிதி கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், இந்தத் தொகைக்குள் எமது வீடுகளை அமைத்து பூரணப்படுத்த முடியாது. இதனால் இந்த வீட்டுத்திட்டத்தை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என கிளிநொச்சியில் பயனாளிகள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
கிளிநொச்சியில் கரைச்சி, கண்டாவளை, பளை பிரதேச செயலக பிரிவுகளில் நான்கு கிராமங்களில் 90 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு நிதியொதுக்கீட்டுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்திய அரசின் 5 லட்சம் ரூபாவும் சிறிலங்கா அரசின் ஒரு லட்சம் ரூபாவும் வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது. இந்த தொகைக்குள் பயனாளிகள் வீட்டை அமைத்துப் பூரணப்படுத்த வேண்டும்.

ஆனால் நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முன்னர் 10 லட்சம் ரூபா வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டபோதும் கூட முழுமையாக அமைக்க முடியாத நிலைய காணப்பட்டது. அதன்போதும் பயனாளிகள் மேலதிகமாக மூன்று அல்லது நான்கு லட்சம் ரூபா செலவு செய்ய வேண்டிய நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் தற்போதைய நாட்டின் பொருளாதார நெருக்கடியில் கட்டடப் பொருள்களின் விலை இருமடங்காகியுள்ள நிலையில் 6 லட்சம் ரூபா திட்டத்தில் எவ்வாறு வீட்டை அமைத்து பூரணப்படுத்த முடியும். இந்த 6 லட்சத்தில் கோழிக்கூடு கூட கட்ட முடியாது. எவ்வாறு வீட்டை கட்டிமுடிக்க முடியும் - என்றனர்.

இதுதொடர்பில் கிளிநொச்சி மாவட்ட செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரனிடம் கேட்டபோது, "மக்கள் குறித்த வீட்டுத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. எனவே நாம் மக்களின் விருப்பத்துக்கு மாறாக செயற்பட முடியாது" -என்றார்.
(ச-214)



# உதவிப் பொருளாக மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம், ஜூன் 25
அரியாலையில் பாடசாலை செல்லும் மாணவர்களைக் கொண்ட பொருண்மியம் நலிவடைந்த 15 குடும்பங்களுக்கு தலா ஒன்றரை லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது.
பீதாம்பரம் அறக்கட்டளை நிதிய அனுசரணையில் காங்கேசன்துறை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகத்தால் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது.
(ய-9)

# மேலதிக கொடுப்பனவு பெற சிலர் ஆர்வமில்லை

சாவகச்சேரி, ஜூன் 25
தென்மராட்சி பிரதேசத்தில் சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்கள், அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற மேலதிக கொடுப்பனவைப் பெற ஆர்வமில்லாமல் உள்ளனர்.
சாவகச்சேரி, கொடிகாமம், வரணி , கைதடி ஆகிய இடங்களில் உள்ள சமுர்த்தி வங்கிகளில் கடந்த 15 தினங்களாக சமுர்த்திப் பயனாளிகள் மற்றும், காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்கள் என 10 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள் விநியோகிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. நேற்று செவ்வாய்க்கிழமை வரை 70 வீதமானவர்களே மேலதிக்கொடுப்பனவைப் பெற்றுள்ளனர்.
சமுர்த்தி வங்கிகளில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வரும் நிலையில் சிலர் கொடுப்பனவைப் பெறவில்லை.
இதேவேளை காத்திருப்போர் பட்டியலில், உள்ளவர்களில் மாற்றுத்திறனாளிகள், நாள்பட்ட சிறுநீரக நோயாளிகள், மற்றும் முதியவர்களுக்கு மேலதிக கொடுப்பனவாக தலா 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதால் சமுர்த்தி வங்கிகளில் கணக்கை ஆரம்பித்து அதன் இலக்கத்தை வழங்குமாறு அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.
(ஒ-14-9)

# கட்டுமானப் பணியின் ஒப்பந்தங்கள் இரத்து

சாவகச்சேரி, ஜூன் 25
உள்ளூராட்சி சபைகளில் உட்கட்டுமானப் பணிக்கு மேற்கொண்ட ஒப்பந்தங்களை இரத்துச் செய்யுமாறு ஒப்பந்தகாரர்கள் அறிவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் சபை நிதி ஒதுக்கீடு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு போன்றவற்றின் மூலம் உட்கட்டுமானப் பணிகள் ஒப்பந்தம் செய்யப்பட்டன.
ஆனால் தற்போதைய மூலப்பொருள் விலை அதிகரிப்பு, தட்டுப்பாடு போன்றவற்றால் கட்டுமான வேலைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. இதனால் ஒப்பந்தத்தை இரத்துச் செய்யுமாறு ஒப்பந்தகாரர்கள் சபைகளுக்கு அறிவித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படடது.
(ஒ-14-9)

# நாளாந்த வாழ்வாதாரத்துக்காக புளியம்பழம் விற்கும் முதியவர்

கிளிநொச்சி, ஜூன் 25
கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் முதியவர் ஒருவர் தனது வாழ்வாதாரத்துக்காக புளியம்பழத்தை உடைத்து விற்பனை செய்து வருகின்றார்.
தனது பிள்ளைகள் போரில் உயிரிழந்துவிட்டதாகவும் தனக்கு இரண்டு கண்களும் பார்வை இழந்த நிலையில், அவரது இரண்டு பேரப்பிள்ளைகளையும் புளியம்பழம் விற்று அதில் வரும் பணத்தில் வளர்த்து வருவதாக முதியவர் தெரிவித்தார்.
முதியவருக்கு ஒரு நிரந்தர வீடின்றி எந்தவித பாதுகாப்பும் இல்லாத ஒரு தற்காலிக கொட்டகையில் பேரப்பிள்ளைகளுடன் வாழ்கின்றார்.
நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக தாம் ஒரு வேளை உணவை மாத்திரமே எடுத்துக்கொள்வதாகவும் முதியவர் தெரிவித்துள்ளார்.
(ஒ-14-113)

# முன்பள்ளி மாணவர்களுக்கு பசுப்பால் வழங்கும் திட்டம்

கிளிநொச்சி, ஜூன் 25
கிளிநொச்சி - கண்டாவளை பிரதேசத்துக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட சில முன்பள்ளிகளில் பசுப்பால் வழங்கும் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.
தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் பெருமளவான சிறுவர்கள் மந்த போசாக்கு நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என அண்மையில் யுனிசெப் அறிவித்திருந்த நிலையில் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.
அதற்கமைய மயில்வாகனபுர கிராமத்தில் இயங்கும் "மயூரன் முன்பள்ளி" மாணவர்களுக்கு நேற்று பசுப்பால் வழங்கப்பட்டது.
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான முருகேசு சந்திரகுமாரின் நிதி அனுசரணையில் பசுப்பால் வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது (ஒ-14-214)

# திருக்கேதீச்சர கும்பாபிஷேகத்துக்கு போக்குவரத்து ஒழுங்கு செய்துதருக

## ஆறு.திருமுருகன் பிரதமருக்கு கடிதம்

யாழ்ப்பாணம் , ஜூன் 24
திருக்கேதீச்சர கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வருகைதரும் அடியார்களுக்கு விசேட போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டும் என அகில இலங்கை இந்துமாமன்ற உபதலைவரும் திருக்கேதீச்சர திருப்பணிச் சபையின் உபதலைவருமான கலாநிதி ஆறு.திருமுருகன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
கடிதம் ஒன்றை அனுப்பி அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது:-
இந்திய - இலங்கை அரசின் ஒப்பந்தத்தின்கீழ் இந்திய அரசால் சுமார் 350 மில்லியன் ரூபா செலவில் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ள ஆலயத்தின் கும்பாபிஷேக பெருவிழாவில் எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை அடியவர்கள் வழிபாடு செய்ய வேண்டிய முக்கியநாள்களாகும்.
இதற்கென உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து யாத்திரிகர்கள் வருகை தரவுள்ளனர்.
ஆகவே தற்போதைய எரிபொருள் நெருக்கடியைக் கருத்திற்கொண்டு விசேட போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்ய பிரதமர் மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது.
இதேவேளை, திருக்கேதீச்சரக் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு தமிழகத்தின் திருச்சி மற்றும் சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கு விசேட விமான சேவைகள் எதிர்வரும் முதலாம் திகதி முதல் எதிர்வரும் 14ஆம் திகதி வரை தினமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உங்கள் எண்ணத்தை பிறர் புரிந்துகொள்ளமாட்டார்கள். குடும்பத்திலும் பிரச்சினையை சந்திப்பீர்கள். எதிர்பார்த்தவற்றில் ஏமாற்றம் அடைவீர்கள். உதவி புரிவதாக சொன்னவர்கள் விலகிச் செல்வர்.

**இடபம்:** உங்களுடைய ஆலோசனைக்கு மதிப்பு உண்டாகும். பிரச்சினைக்குத் தீர்வு காண்பீர்கள். செயல்களில் இருந்த நெருக்கடி விலகும். நினைத்ததை சாதிப்பீர்கள்.

**மிதுனம்:** எதிர்பாராத நஷ்டங்கள் உண்டாகலாம். நிதானித்து செயற்படுவது நல்லது. செலவுகள் அதிகரிக்கும். வார்த்தைகளில் கவனமும் எச்சரிக்கையும் தேவை.

**கடகம்:** மனம் மகிழும் வகையில் சம்பவம் நடைபெறும். திட்டமிட்டு செயற்பட்டு லாபம் காண்பீர்கள். சிந்தித்து செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். செலவுகள் கட்டுப்படும். எதிர்பாராத வரவு உண்டாகும்.

**சிம்மம்:** எதிர்பாராத செலவுகளால் சங்கடப்படுவீர்கள். திட்டங்கள் தீட்டி செயற்படுத்த முயற்சிப்பீர்கள். தொழிலில் எதிர்பார்த்த நன்மை கிடைக்காது. உங்கள் கவனம் இன்று தடுமாறும்.

**கன்னி:** எண்ணம் இன்று நிறை வேறும். வீட்டைப் புதுப்பிக்கும் பணி யில் ஈடுபடுவீர்கள். பணவரவு கூடும். கனவுகள் இன்று நிறைவேறும். எதிர்பாராத பணவரவால் சங்க டங்களில் இருந்து விடுபடுவீர்கள்.

**துலாம்:** திட்டமிட்டு தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். பணவரவு அதிகரிக்கும். வேலை தேடும் முயற்சியில் தீவிரமாவீர்கள். குலதெய்வ வழிபாட்டால் எண்ணம் நிறைவேறும். உற்சாகத்துடன் செயற்பட்டு வருவீர்கள். எதிர்பாலினிடம் எச்சரிக்கை தேவை..

**விருச்சிகம்:** பிரச்சினைகள் இன்று முடிவுக்கு வரும். குருவருளால் நினைத்தவற்றில் வெற்றி காண்பீர்கள். தடைகளைத் தாண்டி சாதிப்பீர்கள். மற்றவர்களால் முடியாத ஒன்றை நீங்கள் முடித்துக் காட்டுவீர்கள்.

**தனுசு:** நிதானம் அவசியம். யோசித்து செயற்படுவதால் சங்கடங்கள் ஏற்ப டாமல் போகும். தாய்வழி உறவு விஷ யத்தில் சங்கடத்தை சந்திப்பீர்கள். எதிர்பார்த்ததை அடைய முடியாமல் போகும்.

**மகரம்:** புதிய பொருள் வாங்குவீர்கள். குடும்ப நலனில் கவனம் செல்லும். மகிழ்ச்சியான நாள். தம்பதியருக்கி டையே பிரச்சினை தீரும். சுறுசுறுப்பு டன் செயற்படுவீர்கள்.

**கும்பம்:** எதிர்ப்பை முறியடித்து சாதிப்பீர்கள். முயற்சி வெற்றி பெறும். உங்கள் நிலை உயரும். குடும்பத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். அலட்சியம் செய்தவர்கள் இன்று உங்களைப் பாராட்டுவர்.

**மீனம்:** வேலைப்பளு அதிகரிக்கும். விருப்பங்கள் நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். பணியாளர்களுக்கு புதிய சுமை உண்டாகும். பணியில் கவனம் செலுத்த முடியாமல் போகும். உறவு களால் சங்கடத்துக்கு ஆளாவீர்கள்.

# ராஜபக்சக்களைக் காக்கும் பாதுகாப்பு அரணே ரணில்

## 19 பிளஸுக்குப் பதிலாக 19 மைனஸ்

## முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூன் 25**

**அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டத்தில் 19 பிளஸுக்கு பதிலாக 19 மைனஸையே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொண்டுவரவுள்ளார். இதனூடாக ஜனாதிபதி கோத்தாபயவின் அதிகாரங்கள் இதனூடாக குறைக்கப்படாது என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

21ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என பிரதமர் ரணில் கூறியிருக்கின்றார். ஆயினும் 19ஆவது திருத்தச் சட்டத்தையே கொண்டு வர வேண்டும் என எதிர்த் தரப்பினர் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் 19 பிளஸைக் கொண்டு வருவதற்குப் பதிலாக 19 மைனஸையே ரணில் கொண்டு வர வுள்ளார்.

இலங்கை மின்சார சபையை இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அழுத்தங்களை வழங்கி வருகின்றார் என்று இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவரிடம் ஜனாதிபதியே கூறியிருக்க வேண்டும். அதனடிப்படையிலேயே இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் கோப் குழுவில் இதனை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த விவகாரம் தற்போது இருநாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திரப பிரச்சினையாக மாறியிருக்கின்றது.

இதனால், இலங்கைக்குக் கிடைக்கவுள்ள இந்தியாவின் எதிர்கால உதவிகள் இல்லாமற் போகும் சாத்தியம் காணப்படுகிறது.

21ஆவது திருத்தச் சட்டத்தில் தற்போதைய ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்குப் பதிலாக அடுத்த ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கே பிரதமர் ரணில் நடவடிக்கை எடுத்துள்ளார். ரணில் ராஜபக்ச குடும்பத்தைப் பாதுகாக்கும் பிரதானியாகவே செயற்படுகின்றார்.

ராஜபக்சக்களுக்கு ரணில் எப்போதும் நம்பிக்கைக்குரியவர். இதனாலேயே அவர்கள் ரணிலைப் பிரதமராக்கினர் என்றார். (ச-22)


# ஏலவிற்பனை

**வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபை**

15.05.2022 நடைபெற்ற சிறப்புபொதுக் கூட்டத்தின் தீர்மானத்திற்கு அமைவாக சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்திலுள்ள பின்வரும் பாவனையற்ற பித்தளைக் குத்துவிளக்கு, கற்கிடாரம், பித்தளைக் கிடாரம் மேலும் பல உடைந்த பொருள்கள். நாளை (26.06.2022 ) ஞாயிற்றுக் கிழமை (தீர்த்தத் திருவிழா அன்று) பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய முன்றலில் ஏலவிற்பனை நடைபெறும்.

1. பித்தளைக் குத்து விளக்குகள்
2. பாவித்த கற்கிடாரங்கள்
3. பாவித்த டாசர்கள் 6
4. பாவித்த பஞ்ச ஆராத்திகள்
5. பாவித்த கற்பூர தீபங்கள்.
6. பித்தளைப் பொருள்கள்
7. மின்பிறப்பாக்கிகள்- 2 ( திருத்த வேலைகள் உண்டு)
8. அம்மன் சாறிகள்.

(cr. 36246) (2.6) **ஆலய பரிபாலன சபை**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 23 . 07 . 1956

இறைவன் திருவடியில் 25 . 06 . 2021



அமரர் திருமதி **இராசலட்சுமி இராசசேகரம்**

திதி: ஆனி பிரதமை

ஓராண்டு நீங்கினாலும்
உன் வண்ணமும் எண்ணமும் உணர்வுகளும்
என்றும் எம்மை விட்டு நீங்காதம்மா
ஓம் சாந்தி!

**மாதகல் வடக்கு, மாதகல்.** (cs 45324) (2.6)

என்றும் உங்கள் நினைவுகளுடன் **குடும்பத்தினர், உற்றார், உறவினர்.**

# மரண அறிவித்தல்

## தர்மலிங்கம் தாமோதரம்பிள்ளை



மூளாயைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தாமோதரம்பிள்ளை நேற்று (24.06.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், தயாலினி (Staff Technical officer, Medical Faculty, Jaffna), தயாநிதி (Bio medical engineer, Meditechnology (Pvt) Ltd), நேதாஜினி (Teacher, Kili/Jeyapuram Maha Vidyalayam) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகிர்தன் (Teacher, Myliddy Kalaimahal Vidyalayam), சியாமா (Aissistant Director Central Bank, Sri Lanka), வசீகரன் (Railway Station Master, K.K.S) ஆகியோரின் மாமனாரும், அக்ஷரன், தருணி ஆகியோரின் பாட்டனாரும், அமரர் பாக்கியலட்சுமி, மகாலட்சுமி, கணேசலிங்கம் ஆகியோரின் சகோதரரும், பாலசிறீ, மோகனா, பாஸ்கரன், தினேஸ், விஸ்ணுவர்த்தன் ஆகியோரின் மாமனும், தேவலிங்கம் ஆனந்த சொரூபன், சசீலன், மயூரதன், மதுசன் அஜீசன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"லட்சுமி வாசா" சடச்சப்பை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை. 0777 007 036, 076 095 6837**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS19816)1-6


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## நுண்ணீர்ப்பாசன (Micro irrigation) கோட்பாடுகள்
(விவசாயபொறியியல் துறைசான்றிதழ் கற்கைநெறி)

விவசாயப் பொறியியல் துறை, விவசாயபீடத்தினால் நடாத்தப் படவுள்ள சான்றிதழ் கற்கை நெறிக்கு ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை**

❖ தரம் 9 வரைகற்றிருத்தல்.

**கற்கைநெறிதொடர்பானவிபரம்**

❖ கற்கைநெறிக்கானகட்டணம் - ரூபா 5000/-
❖ மொழிமூலம் - தமிழ்
❖ கற்கைநெறிக் காலம் - 8 வாரங்கள்

கற்கை நெறிக்கான விண்ணப்பபடிவத்தை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இணையத்தளத்தில் **(www.jfn.agri.ac.lk)** அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீடத்தின் பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பதாரிகள் தமது பூரணப்படுத்தபட்ட விண்ணப்பப் படிவத்துடன் தமது தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணப் பிரதிகளை **22.07.2022 முன்னர் பீடாதிபதி, விவசாயபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அறிவியல்நகர், கிளிநொச்சி** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

மேலதிக தகவல்களுக்கு இணைப்பாளர், **கலாநிதி. ந. கண்ணன். அவர்களுடன் 021 206 0174 அல்லது 077 651 1553** எனும் தொலை பேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ளவும்.

(CR 36248) (3/6)

**பதிவாளர்**

# நினைவழியா பத்தாண்டுகள்

தோற்றம் 28 * 09 * 1942



மறைவு 15 * 07 * 2012

## அமரர் சின்னத்தம்பி நல்லையா

**திதி: அபரபக்க துவாதசி (25.06.2022)**

நல்லவராக கரவெட்டி மண்ணிலுதித்து
நல்லையராக மிதித்த புல்லும் சாகாமல்
நல்லுலகில் எழுபத்தாண்டுகள் வாழ்ந்து
நமையெல்லாம் நல்லப்பனாக குறைவின்றி
நன்னிலை எய்த வைத்து நாம் வாழ்
நற்றவத்துடனே நீரொளியாகி மறைந்து
நல்பத்தாண்டுகள் பறந்ததுவே எம் பிதாவே

என்றும் கண்ணீருடன்...
குடும்பத்தினர்

அண்டர்சன் தொடர்மாடி,
கொழும்பு - 05.

"திருப்பதி"
திருமலி தோட்டம்,
கரவெட்டி.

# மரண அறிவித்தல்



## திருமதி இராசலெட்சுமி தில்லைநாதன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலெட்சுமி தில்லைநாதன் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற குமாரசாமி தில்லைநாதன் அவர்களின் அன்பு மனைவியும் ரஜினி (லண்டன்), ரமணன் (லண்டன்), ரஜிதா (நோர்வே) ஆகியோரின் அன்புத்தாயாரும் அருள்ரூபதாஸ் (ரூபன் - லண்டன்), சுதர்சினி (லண்டன்), விஜயபாலா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் கந்தவனம், சண்முகலிங்கம் (ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர), பாக்கியலட்சுமி, வசந்தகுமார் (ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர), பாஸ்கரன் (லண்டன்), கிருபாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசாத்தி, தயாநிதி, இரத்தினசிங்கம், செல்வராணி, கலாராணி, ரஜனி ஆகியோரின் அன்பு மைத்துனியும் நிக்ஸி (லண்டன்), கவின் (லண்டன்), திவீஷன் (லண்டன்), லிதுஷ் (லண்டன்), பவிஷ்னா (லண்டன்), சலோஜன் (நோர்வே), சஜினா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை (26.06.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 77, சுப்பிரமணியம் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 617 9030**

# மரண அறிவித்தல்

மண்ணில் 20 . 07 . 1956



விண்ணில் 24 . 06 . 2022

அமரர்

## திருமதி சிவபாலன் புஷ்பமாலா

தொல்புரம் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திருமதி சிவபாலன் புஷ்பமாலா அவர்கள் 24.06.2022 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் லீலாவதி தம்பதியினரின் அன்பு மகளும்,காலஞ்சென்றவர்களான கந்தசாமி சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகளும் திரு.க.சிவபாலன் அவர்களின் அன்பு மனைவியும், புஷ்பகுமார், புஷ்பகலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாலசுதன், பாலசுவர்ணா, ஜனகன் ஆகியோரின் அன்புத்தாயாரும் ,காலஞ்சென்ற பாரதி, திரு.கஜேந்திரன், சிவதர்சினி ஆகியோர்ரின் அன்பு மாமியாரும் சுருதிகா, சுருஜன், ஜனுதிகா, ஆத்விகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2022) சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வட்டு வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொல்புரம் கிழக்கு,**
**சுழிபுரம்.**

**077 153 0748**
**077 652 3108**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

A9 வீதி, முறிகண்டியில் இயங்கும் பிரபல
**சைவ உணவகத்திற்கு**
பின்வரும் வேலையாள்கள் உடன் தேவை.
முகாமையாளர், காசாளர், உணவு உற்பத்தியாளர், உணவு பரிமாறுபவர், உணவு பொதி செய்வோர், சுத்திகரிப்பாளர் போன்ற பதவிகளுக்கு ஆர்வம் உள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

(cs 45322) (2/6)

**077 386 6250**

## வேலையாள்கள் தேவை

ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு A/L, Degree (Accounting) படித்த Trainees மற்றும் அனுபவமுள்ளவர்களும், வாகன உதிரிப்பாகம் பழகக் கூடியவர்களும் தேவைப்படுகின்றனர்.
வயது எல்லை: 18 - 35

(cs 45321) (2/6)

**No.:179,177B Stanly Road, Jaffna.**
**021 221 4605, 076 567 4930**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## பண்ணை இயந்திரங்களின் (Farm Machinery) கோட்பாடுகள்
## (விவசாயபொறியியல் துறைசான்றிதழ் கற்கைநெறி)

விவசாயப் பொறியியல் துறை, விவசாயபீடத்தினால் நடாத்தப் படவுள்ள சான்றிதழ் கற்கை நெறிக்கு ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை**
- ❖ தரம் 9 வரை கற்றிருத்தல்.

**கற்கை நெறி தொடர்பான விபரம்**
- ❖ கற்கை நெறிக்கான கட்டணம் - ரூபா 7500/-
- ❖ மொழி மூலம் - தமிழ்
- ❖ கற்கைநெறிக் காலம் - 8 வாரங்கள்

கற்கை நெறிக்கான விண்ணப்பபடிவத்தை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இணையத்தளத்தில் **(www.jfn.agri.ac.lk)** அல்லது அறிவியல் நகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப தாரிகள் தமது பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் தமது தகை மைகளை உறுதிப்படுத்தும் ஆவணப் பிரதிகளை **22.07.2022** முன்னர் **பீடாதிபதி, விவசாயபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அறிவியல்நகர், கிளிநொச்சி** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள்.

மேலதிக தகவல்களுக்கு இணைப்பாளர், **கலாநிதி. ந. கண்ணன்.** அவர்களுடன் **021 206 0174** அல்லது **077 651 1553** எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ளவும்.

(CR 36249) (3/6)

**பதிவாளர்**

## coop Life கோப்லைப் இன்சூரன்ஸ் லிமிட்டட் இன்
## மாபெரும் வேலை வாய்ப்பு

**கோப்லைப் காப்புறுதி நிறுவனம்** அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் மற்றும் கிராமிய வங்கிகளின் மூலதனத்தின் உற்பத்தியாளர் மக்கள் மயப்படுத்தப்பட்ட தேசிய நிறுவனம் ஆகும். இந் நிறுவனம் வணிகத்துறையில் உயர் தகமைகள் மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்கள் ஊடாக கணினி மயப்படுத்தப்பட்ட பிரதான கிளைகள் 88 மற்றும் 126 காப்புறுதி சேவை மையங்களின் கீழ் சேவைகள் வழங்கப்படுகின்றன.

**வடமாகாணத்தில்** காணப்படுகின்ற மாவட்டங்களில் இயங்குகின்ற கிளைகளில் பின்வரும் வெற்றிடங்களிற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது.

- கிளை முகாமையாளர் ( Branch Manager )
  காப்புறுதித்துறை மற்றும் முகாமைத்துவ அனுபவம்.
  ( யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, சாவகச்சேரி )
- விற்பனை முகாமையாளர் (Sales Manager )
  காப்புறுதித்துறை அனுபவம்
  ( அனைத்து கிளைகளிற்கும் )
- உதவி விற்பனை முகாமையாளர் ( Assistant Sales Manager )
  ( அனைத்து கிளைகளிற்கும் )
- வெளிக்கள உத்தியோகத்தர்
  க.பொ.த சாதாரணதரத்தில் 6 பாடங்கள் சித்தி
  தற்போது A/L பரீட்சையினை மேற்கொண்ட மாணவர்கள் அரச அல்லது தனியார் துறையில் ஓய்வு பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியும்.



**யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு,மன்னார், நெல்லியடி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய் ஆகிய கிளைகளிற்கு மேற்படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.**

வருமானம் மற்றும் ஏனைய நன்மைகள் நேர்முகத்தேர்வில் தெரிவிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி : 10.07.2022

**விண்ணப்ப முகவரி**
zmlife.northern@coopinsu.com
info.life@coopinsu.com
அல்லது
வலய முகாமையாளர்
கோப்லைப் இன்சூரன்ஸ் லிமிட்டட்,
சத்தியா கட்டடம்,
1ஆம் குறுக்குத்தெரு, வவுனியா.




சிவமயம்
பிள்ளையார் துணை



## புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை
## திருவருள்மிகு சித்திவிநாயகர் தேவஸ்தானம்
## ஏகாதச தின (பதினொரு திருநாள்)
## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2022

**ஐங்கரன் மெய்யடியார்களே!**
மங்கலகரமான சுபகிருது 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகி பதினொரு தினங்கள் மஹோற்சவம் நடைபெற்று தொடர்ந்து பூங்காவன உற்சவம், வைரவர் பொங்கலுடன் பூர்த்தியாக உள்ளது.

| 03.07.2022 ஞாயிறு | 12.07.2022 செவ்வாய் | 13.07.2022 புதன் |
|---|---|---|
| கொடியேற்றம் | தேர்த்திருவிழா | தீர்த்தத்திருவிழா |
| முற்பகல் 10.30 மணி | முற்பகல் 10.00 மணி | முற்பகல் 11.00 மணி |

**பிரம்மஸ்ரீ.தியாக கெங்காதரக்குருக்கள்**
**பிரம்மஸ்ரீ.து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்**
**ஆகியோரின் ஆசிகளுடன்**

**மஹோற்சவ குரு**
**கிரியா கலா மணி சிவஸ்ரீ. சிதம்பர கிருஷ்ணசாமிக்குருக்கள்**

ஐங்கரன் அடியவர்கள் ஊர் மக்கள் அவ்வமயம் ஆயாக்கடவை ஐங்கரனை வழிபட்டு திருவருள் பெற்று மங்கலகரமாக மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வீராகுக.

*மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலமெல்லாம்.*
சுபம்

077 671 4191, 021 224 5051

ஆயாக்கடவை ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்,
புன்னாலைக்கட்டுவன்
சுபகிருது வருஷ ஆனி சங்கடகர சதுர்த்தி

ஊர் மக்களும்,
மஹோற்சவ உபயகாரரும்

பா. சுந்தரராஜசர்மா
ஆதீன கர்த்தா
ஆயாக்கடவை ஆதீனம்,
புன்னாலைக்கட்டுவன்

(CS 45327) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 04 . 10 . 1939



இறைவன் அடியில் 21 . 06 . 2022

## பரநிருபசிங்கம் ரமணி

வேலணை மேற்கு 7ஆம் வட்டாரம் சிற்பனையை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 89, ஓட்டுமடம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பரநிருபசிங்கம் ரமணி கடந்த (21.06.2022) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தசாமி செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பரநிருபசிங்கம் (கும்பர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற ரவிச்சந்திரன், குணபூசணி, வானதி (லண்டன்), காலஞ்சென்ற பாலச்சந்திரன், நந்தினி, நளாயினி (கனடா), ஞானச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகடாட்சம், பாலகிருஷ்ணா (லண்டன்), ரஞ்சரெத்தினம், சிறிதரன் (கனடா), சந்தியா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பகிரத இலட்சுமி, ஜெயமோரெட்ணம், தெய்வேந்திரம், காசிலிங்கம் மற்றும் பாசுபதம் (கனடா), பன்னீர் செல்வி (கொழும்பு), பன்னீர்செல்வம் (கொழும்பு), அருட்செல்வி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மகாலெட்சுமி, சிவபாக்கியம், கமலாம்பிகை, விஜயலட்சுமி மற்றும் செல்வம், புஸ்பராணி (கனடா), மலர்மகள் (கனடா), மலர்மகள், சண்முகவடிவேல் (கொழும்பு), யோகானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், லக்ஷிகா, துஷிபன் (கனடா), அனோஜன், சாருஜன், திவ்யா (லண்டன்), அகல்யா (லண்டன்), விதுஷா (கனடா), சுரேந்திரன் (கனடா), பவித்திரா, அக்ஷையா, கரிஸ் (கனடா), சியாம் (கனடா), விகாஷ் (கனடா), பௌவியா (லண்டன்), ரோகில் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் வேலணை அம்பலவி இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

89, ஓட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

சிவம் : 077 504 3221
ரஞ்சன் : 077 413 3410

தகவல் :
குடும்பத்தினர்

(CS 45328) (3/6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசியல் சூதாட்டத்தில் மக்கள் இரையாகின்றனர்

## சஜித் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 25
நாட்டில் இன்று மக்களின் அபிலாஷைகள் நசுக்கப்பட்டு ஆட்சியில் இருக்கும் தரப்பு பல்வேறு வழிகளில் பல்வேறு விதமான உத்திகளைப் பிரயோகித்து நசுக்கி தங்கள் நோக்கங்களை சாத்தியப்படுத்திக்கொள்ளும் அரசியல் சூதாட்டத்தில்220லட்சம்மக்கள்இரையாக்கப்பட்டுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் அரசமைப்புத்திருத்தங்கள் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறிலங்கா அரசாங்கம் தனது பதவியைப் பாதுகாத்துக்கொண்டு இருப்பைத்தக்கவைப்பதற்காகசகலதையும் மேற்கொள்கின்றதே தவிர மக்களின் நலனுக்காகஅல்ல. சகலதுறைகளிலும் மாற்றம் வேண்டி மக்கள் போராட்டம் நடத்திவந்தாலும் மக்களின் போராட்டத்துக்கு கடந்த மே மாதம் 9 ஆம் திகதி அலரி மாளிகையிலிருந்து கறுப்புக் கறை படிந்துள்ளது.

போராட்டத்தின்மீதுதாக்குதல்நடத்தியவர்கள் சுதந்திரமாக நடமாடும்போது, பாதிக்கப்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்களின் மனித உரிமைகள் இரக்கமற்ற முறையில் மீறப்பட்டுள்ளன.

முழுநாடும்அரசியல்சீர்திருத்தம், மாற்றத்தைஎதிர்பார்த்தாலும்ரணில்விக்கிரமசிங்க. ராஜபக்சகுடும்பத்தைபாதுகாக்கும் பாதுகாப்புப் பிரதானியாக நியமிக்கப்பட்டு அரசியல்சூதாட்டம் அரங்கேற்றப்படுகின்றது. ஆனால் முறையான பொறிமுறைக்கட்டமைப்பைஸ்தாபிக்கும் வகையில் தேவையான நடவடிக்கைகளை எதிர்க்கட்சியே மேற்கொள்கின்றது - என்றார். (ச-இ)

### நிபந்தனையுடன்...

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்காக நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று மாலை இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போதே இலங்கைக்கு நிபந்தனையுடன் உதவுவதற்கு நாணயநிதியம் உடன்பட்டுள்ளது.

ஒருவார காலம் இலங்கையில் தங்கியிருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு, ஊழியர்கள் மட்ட உடன்படிக்கையை எட்டுவது தொடர்பான கொள்கை அடிப்படையிலான விடயங்கள் குறித்து நீண்ட ஆய்வை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்படி, பிரதமர், நிதியமைச்சு, மத்திய வங்கி உள்ளிட்ட பொருளாதார அதிகாரிகள் மற்றும் நிபுணர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியதுடன் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளனர். (அ-ம)

### தவறான...

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழுப் பகுதியில் இளைஞர் ஒருவன் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார்.

நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சிவலோகேஸ்வரன் மதுரகன் (வயது - 30) என்பவரே உயிரிழந்தவராவார். இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம)

### எரிபொருள்...

இது தொடர்பில் தற்போது சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா. புவனேஸ்வரன் நேற்றையதினம் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்தியறிக்கையில் உள்ளதாவது:

ஆசிரியர்களின் போக்குவரத்துக்கு ஏதாவது பொறிமுறையை உருவாக்குமாறு பல தடவைகள் அரசிடம், அமைச்சிடம் கோரிக்கை முன்வைத்தோம். அதற்கு இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை. நாளுக்குநாள் நெருக்கடிகள் அதிகரித்தே செல்கின்றன. பொதுமக்களுக்கும் ஆசிரியர்களுக்கும் முரண்பாடுகள் உருவாக ஆரம்பித்துவிட்டன.

ஆசிரியர்களின் போக்குவரத்துக்காகப் பொறிமுறை உருவாக்கப்படாவிட்டால் திங்கள் முதல் பாடசாலைகளுக்குச் செல்லமுடியாது என்பதனை கல்வி அமைச்சுக்கும் பெற்றோருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர்களின் போக்குவரத்து இடர்பாடு குறித்து, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடியபோது, வடமாகாணத்தில் விசேடமாக தூர இடங்களுக்கு பணிக்குச் செல்லும் ஆசிரியர்களின் நிலை குறித்துப் பேசியபோது, அவர் இடர்பாடுகள் தொடர்பாக பாடசாலை அதிபருக்கு முறைப்படி அறிவிக்குமாறும். அதனை ஏற்றுக்கொள்ளாத அதிபர்கள் தொடர்பாக தமக்குத் தகவல் தருமாறும் கூறியுள்ளார். ஆகையால் தூர இடங்களுக்குப் பணிக்குச் செல்வோர் போக்குவரத்து இடர்பாடு தொடர்பாக அதிபருக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆசிரியர்களுக்கான போக்குவரத்துகள் சீராகாவிட்டால் பாடசாலைக்குச் சமூகமளிக்க முடியாத சூழ்நிலையை பெற்றோர் புரிந்துகொண்டு உங்கள் குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்பாது வீண் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இல்லையேல் பெற்றோராகிய நீங்களாவது ஒன்று சேர்ந்து ஒரு மார்க்கத்தை உருவாக்குங்கள்.

ஆசிரியர்களுக்கான போக்குவரத்து பொறிமுறை உருவாக்கப்படவில்லையென்றால் திங்கள் முதல் பாடசாலைக்குச் செல்ல வேண்டாம் என நாட்டில் உள்ள அனைத்து அதிபர், ஆசிரியர்களையும் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (அ-ம)

### காங்கேசன்துறையில்...

குறித்த மூதாட்டியின் சகோதரன் தோட்டத்துக்குத் தண்ணீர் இறைப்பதற்காகச் சென்றபோது அந்த மூதாட்டி கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்டிருந்தார். இதையடுத்து அவர் காங்கேசன்துறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கிய நிலையில் இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-26-125)

### தமிழகத்தின்...

யில், அவற்றில் உள்ள பொருள்கள் இந்தியத் தூதுவரால் இலங்கை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

குறித்த கப்பலில் 14 ஆயிரத்து 712 தொன் அரிசி, 250 தொன் பால்மா மற்றும் 38 தொன் அத்தியாவசிய உயிர் காக்கும் மருந்துகள் இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே தமிழக அரசின் முதற்கட்ட நிவாரணப் பொருள்கள் கடந்த மாதம் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-22)

### 630 லீற்றர்...

படையில் சம்பவ இடத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலில் மூன்று பரல்களில் அடைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 630 லீற்றர் டீசல் மீட்கப்பட்டுள்ளது. அதை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 28 வயதான இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். சந்தேக நபருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (அ-ம-125-26)

### முதலீட்டு...

மாலை பதவியேற்றார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. தம்மிக்க பெரேரா நேற்றுமுன்தினம் பொது ஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### நீங்கள்...

மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற 'சீர்திருத்தத்துக்கான கூட்டு' என்ற சிவில் சமூக அமைப்புகள் மற்றும் ஓமல்பே சோபித தேரர் உட்பட மதத்தலைவர்கள், நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச, ஐக்கிய மக்கள் சக்தி, சுதந்திர கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடலில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது:

நாம் மதவாதத்தால், இனவாதத்தால், அரச பயங்கரவாதத்தால் ஒடுக்கப்பட்டு வரும் ஓர் இனம். இந்த அநீதிகளுக்கு எதிராக நாம், இன்று, நேற்று அல்ல, பல்லாண்டுகளாக போராடி வருகிறோம். நாம் எப்போதும் ஜனநாயக போராளிகள்தான். அரசியலில் இருந்து மதம் அகற்றப்பட வேண்டும். இலங்கை ஒரு மதசார்பற்ற நாடாக அறிவிக்கப்பட வேண்டும். அதுவரை எமது ஜனநாயகப் போராட்டம் தொடரும்.

225 பேர் கொண்ட நாடாளுமன்றம் என்ற சொற்பதம் இங்கே ஏற்பாட்டாளர்களினால் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது. அந்தக் கும்பலில் எங்களைப் போடாதீர்கள். இந்த கோத்தாபய அரசாங்கத்தை நாங்கள் கொண்டு வரவில்லை. நாம் எப்போதும் இந்த ராஜபக்சக்களை எதிர்த்தே வந்துள்ளோம். நாங்கள் ஒடுக்கப்பட்ட இனத்தின் பிரதிநிதிகள். நீங்கள் சொல்லும் அந்த 225 பேர் வேறெங்கோ இருக்கிறார்களோ எனக்கு தெரியவில்லை. நான் அந்த கும்பலில் இல்லை என்பது எனக்கு தெரியும். நான் மக்களுடனேயே இருக்கிறேன். நான் கட்சி மாறி சோரம்போன அரசியல்வாதி இல்லை.

காலிமுகத்திடல் போராட்டத்தை நாம் கொள்கை ரீதியாக ஆதரிக்கிறோம். 'கோத்தாகோஹோம்' என்ற கோஷத்தை நாம் ஆதரிக்கிறோம். ஆனால், அதற்காக இங்குள்ள பலரைப் போல நாங்களும், 'கோத்தாகோஹோம்' என்ற கோஷத்தை, காலிமுகத்திடலில் இருந்தே கற்றோம் என எண்ண வேண்டாம். ஜனாதிபதி கோத்தாபய, இதைவிட பலமாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபயவாக இருந்த போதே, 'கோத்தாகோஹோம்' என கோஷம் எழுப்பிப் போராடியவர்கள் நாங்கள்.

நாம் புதுப் போராளிகள் அல்ல. நாம் எப்போதும் ஜனநாயகப் போராளிகள் தான். காலிமுகத்திடல் போராட்டத்தை நாம் கொள்கை ரீதியாக ஆதரிக்கிறோம். அந்தப் போராட்டம் மூலம் வரும் மாற்றத்தை நாம் வரவேற்கிறோம். அந்த மாற்றத்தின் மூலம் இலங்கை அரசியலில் இருந்து மதம் அகற்றப்பட வேண்டும். இலங்கை ஒரு மதச்சார்பற்ற நாடாக அறிவிக்கப்பட வேண்டும். அதுவரை எமது ஜனநாயகப் போராட்டம் தொடரும் - என்றார். (அ-ம)

### காங்கேசன்துறை...

குறித்த கப்பல் சேவை மூலம் தேவையான மண்ணெண்ணெய், டீசல் போன்ற எரிபொருள்களையும், உரம், பால்மா, மருந்துப் பொருள்கள் உட்பட்ட அத்தியாவசியப் பொருள்களையும் நியாயமான விலையில் தேவையானளவு எடுத்துவர முடியும் என்று அமைச்சரவை அமைச்சர்கள் சிலர் தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் நிலையில், பாதுகாப்பு அமைச்சு இந்தக் கப்பல் சேவைக்கு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### இந்தியாவிலிருந்து...

நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு உதவும் வகையிலேயே இவ்வாறு 3 லட்சம் கொள்கலன்களில் மண்ணெண்ணெய் இறக்குமதி செய்யப்படவுள்ளது.

மசகு எண்ணெய் போதாமை காரணமாக, சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து மண்ணெண்ணெயை தொடர்ச்சியாக பெறுவதற்கு முடியாமலுள்ள நிலையிலேயே ஒவ்வொன்றும் 210 லீற்றர் அடங்கிய 3 லட்சம் கொள்கலன்களில் மண்ணெண்ணெயை எடுத்துவருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-20)

### ஜெய்சங்கருடன்...

கார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கருடன் ஜூன் 23ஆம் திகதி இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு இந்தியா நல்கிய விரிவான ஆதரவுக்கு வெளிவிவகார அமைச்சர் தனது நன்றியைத் தெரிவித்தார். பல்வேறு துறைகளிலான எதிர்கால ஒத்துழைப்பு குறித்தும் இரு அமைச்சர்களும் இதன்போது கலந்துரையாடினர் - என்றுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்டிவேரம் கோயில் தேர்த்திருவிழா இன்று

சாவகச்சேரி, ஜூன் 25

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் கோயிலின் தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

கோயிலின் பெருந்திருவிழா கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமான நிலையில் இன்று தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது. அத்துடன் நாளை ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-14-9)

# உதைபந்தாட்டப் போட்டியில் வரணி நவா அணி சம்பியன்

சாவகச்சேரி, ஜூன் 25

தென்மராட்சிப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான இந்த ஆண்டு குழு நிலை விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் வரணி நவா பெண்கள் அணி சம்பியனாகியது.

அண்மையில் வரணி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில், வரணி மதி ஒளி அணியும் வரணி நவா அணியும் களமிறங்கின. இறுதிவரை விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் நவா அணி ஒரு கோல் அடித்து சம்பியனாகியது. (ஒ-14,9)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் 08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A-9 வீதியிலிருந்து இரண்டாவது காணி இரு வழிப்பாதையுடன்
- கைதடிச் சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம் : காலை 8.00 - மாலை 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு:

076 658 3621, 077 259 0391

## பணிப்பெண் தேவை

சாவகச்சேரி சங்கத்தானையில் உள்ள வீடு ஒன்றில் தங்கி நின்று வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. போதிய சம்பளம் வழங்கப்படும். (CS 45325) (3/6)

076 768 5307, 076 231 4422


# ஹெரோய்னுடன் குடும்பஸ்தர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 25

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகசபை வீதியில் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 39 வயதான குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் நபரொருவர் ஹெரோய்னை உடைமையில் வைத்திருப்பதாக மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டார். அத்துடன் அவரிடமிருந்து 50 மில்லிகிராம் ஹெரோய்னும் கைப்பற்றப்பட்டது. அதனையடுத்து குடும்பஸ்தருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஒ-14-125)


## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.

❖ மேசன் ❖ மேசன் உதவியாளர்

8.30 Am - 6.00 PM வரை தொடர்பு கொள்ளவும்

(CS 19806A)(3/6) தொடர்பு : 077 724 5399

## வீடு வாடகைக்கு உண்டு

239/1 பிறவுண் றோட் யாழ்ப்பாணம். 4 அறைகள் 2 விசாலமான கோல், குளியலறை, வாகன தரிப்பிட வசதியுடன் வீடு வாடகைக்கு உண்டு.

குறிப்பு:- வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வங்கி ஊழியர்கள் விரும்பத்தக்கது.

076 117 7847, 075 214 4404

## பணிப்பெண் தேவை

வடமராட்சியிலும், கொக்குவிலிலும் வீட்டில் தங்கி நின்று வயோதிபப் பெண்ணைப் பராமரித்து சமையல் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

076 104 2226

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழிச் சந்திக்கு அருகில் 112 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- A-9 வீதியிலிருந்து 250 மீற்றர் தூரத்தில் 18 அடி பாதையுடன்
- நல்ல இயற்கைச் சூழல். நல்ல தண்ணீர்
- 1 பரப்பின் விலை நான்கு இலட்சம் ரூபா (400000). பின்பகுதி காணி பரப்பு மூன்று இலட்சம் (300.000)
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

பார்வையிடும் நேரம்

காலை 8.00 - மாலை 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு

074 2913 726

074 2913 727

## காயா தடிகள் விற்பனைக்கு

காட்டுத் தடிகள் (காயா தடிகள் - 9 அடி தொடக்கம் 12 அடி வரை) விற்பனைக்கு உண்டு.

(CS 19806B)(3/6) தொடர்பு : 077 724 5399


# மாணவிகள் மீது துர்நடத்தை

## ஆசிரியரும், மாணவரும் மறியலில்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை மாணவிகளை பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவரும் மாணவர் ஒருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அத்தோடு சம்பவத்தில் ஐந்து மாணவர்களுக்கு நீதிமன்றில் பிணை வழங்கப்பட்டுள்ளதோடு, மேலும் பலரை தேடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்காக நியமிக்கப்பட்டு, ஆசிரியர் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட ஒருவராலும் மேலும் சில மாணவர்களாலுமே இந்த பாலியல் துர்நடத்தை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறித்த ஆசிரியர் தலைமறைவாக இருந்த நிலையில் ஆசிரியரோடு சேர்ந்து இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டதாகச் சொல்லப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 6 மாணவர்களை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்த ஆறு மாணவர்களையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதோடு ஏனையவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தலைமறைவாக இருந்த ஆசிரியர் நேற்றுமுன்தினம் சட்டத்தரணி ஊடாக நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ளார். அவர் எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் A-9 வீதி முகப்புடன் 27 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- A-9 வீதியை முகப்பாகக் கொண்டது.
- 4 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- வர்த்தக நிலையங்கள், திருமண மண்டபங்கள், களஞ்சியசாலைகள், வாகனக்காட்சியறைகள் அமைப்பதற்கு உகந்த இடம்
- நாவற்குழிச் சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்:காலை 8.00 - மாலை 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு

074 2690 854

076 2611 282


## மரண அறிவித்தல்



திருமதி

வேலாயுதபிள்ளை கமலாம்பிகை

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதபிள்ளை கமலாம்பிகை அவர்கள் நேற்று (24.06.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

குடும்பத்தினர் (மகன்)

வே.கருணாகரன்

021 205 2005

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் அருணாசலம் தர்மராஜா (ஸ்தபதி)

(ஆலய கட்டடக் கலைஞர்)

பிறப்பு 27.02.1948 இறப்பு 06.07.2021

அன்புள்ளம் கொண்டு ஆசையோடு அரவணைத்து
இன்முகம் காட்டி ஈர்க்கும் குணம் கொண்ட
எங்கள் குடும்பத் தலைவரே
உங்கள் முகம் காண ஏங்கித் தவிக்கிறோம்
ஆண்டொன்று கடந்தாலும்....
உங்கள் திருவுருவம் அகம் தன்னில் அழியாது
ஆண்டவன் திருவடியில்
உங்கள் ஆத்மா அமைதியாக உறங்கட்டும்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

எங்கள் குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (25.06.2022) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்

22/6, தாமரை வீதி,
வண். மேற்கு, யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.